முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 20 7 56 | வெள்ளி | ஒலி 15

குறளோவியம்

எலுமிச்சம் பழத்தை சுவைக்காமலிருக்கும்போதே நேரிலே காணும்போது நாவிலே நீர் ஊறுகிறது. புளிப்பு உணர்ச்சியால் ஆட்கொள்ளப்படுகிறோம். ஆனால் மனிதனை நிலை தடுமாறச் செய்யும் சக்தி பெற்ற மதுவை நினைப்பதாலோ—நேரிலே காண்பதாலோ 'போதை' உணர்ச்சி, அவனை ஆட்டிப்படைப்பதில்லை. அதை அருந்திய பிறகே மயக்கமும், அது தரும் மன உற்சாகமும், இன்ப வெறியும் தலையெடுக்கிறது. அதிக போதையில் வீழ்ந்தவனையும் நிமிரச் செய்யும் வல்லமை எலுமிச்சைக்கு உண்டு என்பார்கள். எலுமிச்சை, மதுவை வெல்லக் கூடியது. மதுவின் ஆதிக்கத்தை முறியடிக்கக் கூடியது. கள்ளைப் போலின்றி கண்ட மாத்திரத்தில் நாவில் புளிப்பு உணர்ச்சியைப் பொழியும் தன்மை வாய்ந்தது.

எலுமிச்சையைப் போன்றதே காமமும் என்பதை வள்ளுவர் சொல்லாமற் சொல்லுகின்றார்: இன்ப விருந்தளிக்கும் எழில் நிறைப் பெண்ணை—அவள் இடை காட்டும் நெளிவை—இதழ் காட்டும் சுவையை—இரு விழி காட்டும் குளிரை—பிரிந்திருக்கும் காதலன் தொலைவிலிருந்து எண்ணிப் பார்த்தே களிப்படைய முடியும். விரக விருந்தளிக்கும் பாவை விழியெதிரே நிற்பதைக் கண்டாலே மகிழ்ச்சி பொங்கும். இந்தப் பெருமை வெறியூட்டும் மதுவுக்கும் கிடையாது. மங்கை தரும் சுகத்திற்கே நினைத்துக் களித்தலும், கண்டு மகிழ்தலுமான சிறப்புக்கள் உண்டு என்று செந்நாப்போதார் சித்திரத் தமிழில் தீட்டுகின்றார்.

அதனால்தான் போலும் பெண்களை எலுமிச்சம் பழம் எனவும் சிறப்பிக்கின்றனர். இரண்டுமே கண்டவுடன் உணர்ச்சி யூட்டுவன அல்லவா?

மதுவை — கண்டவுடன் உணர்ச்சி கிளப்பும் எலுமிச்சை வெல்கிறது.

அந்த எலுமிச்சையை—நேரில் கண்டவுடன் மட்டுமன்றி, நினைத்தவுடன் மகிழ்ச்சியூட்டும் காதற் பெண்டிர் வெல்லுகின்றனர்.

அந்த சிறப்புக்கு இதோ குறள்.

"உள்ளக் களித்தலும்
காண மகிழ்தலும்
கள்ளுக்கு இல்
காமத்திற்கு உண்டு."

(கருணா)

★ ★ ★

இலக்கியத்தில் நாம்

கண்ணீர்த்துளிகளை அலட்சியப் படுத்திய எத்தனையோ சதைக் கொழுப்பேறிய சரித்திரக் கதாநாயகர்கள் அந்தக் கண்ணீர் வெள்ளத்திலேயே மூழ்கி மூச்சுத் திணறி செத்திருக்கிறார்கள்.

பொதுவாகவே கண்ணீர்த்துளிகளுக்கு சக்தி அதிகம் என்பார்கள் உலகத்தைப் படித்தவர்கள். நம் இன முன்னோன், முப்பால் உணர்ந்த மேதை, வள்ளுவன்கூட 'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்தான் செல்வத்தை தேய்க்கும் படை' என்று சொற்சித்திரம் தீட்டி விளக்கினார். கண்ணீர்த் துளிகளின் மகத்தான சக்தி குறித்து.

சிரிக்கின்ற சிரிப்பிலே பல ரகம் இருப்பதுபோலவே, அழுகின்ற கண்ணீரிலும் எத்தனையோ விதம், ரகம், வழக்கிலே இருந்து வருகிறது.

வண்ணம் பூசி, 'வாலிபனுக்கு' வலைவீச நினைப்பவளின் வசீகரச் சிரிப்பு!

விலை கூறுமுன் வாங்க வந்தவனை இழுத்து உட்கார வைக்கும் வணிகனின வர்த்தகச் சிரிப்பு!

கண்ணின் கடைக் கூட்டிலே கனிவு தேக்கி; கனி இதழ் ஓரங்களில் காதலன் மட்டும் காண மென்நகை பூக்கும் கட்டழகியின் காதல் சிரிப்பு!

கலையோடு தொடர்பு கொண்டவனின் கலைச் சிரிப்பு! காந்தச் சிரிப்பு! இத்தியாதி, இத்தியாதி!

கண்ணீரிலும் அப்படித்தான். கற்சிலையைப் பார்த்து, கசிந்து கண்ணீர் மல்கும் பக்தனின் பரிதாபத்துக்குரிய கண்ணீர்!

'வானவில்போல என் வாழ்வில் வந்து மறைந்தீரே!' என்று வாலிபனைப் பார்த்து, அவனால் ஏமாற்றப்பட்ட ஏந்திழை வடிக்கும் ஏமாற்றக் கண்ணீர்!

மாணிக்கக் குவளையில் பாலூட்டி, மரகதத்தாலான தொட்டிலிலே ஊஞ்சலாட்டி, கண்ணுக்குக் கண் என்று வளர்த்தேனே, நீ மண்ணுக்கு மண்தானென்று எனைவிட்டுப் போனாயோ? என்று தாய்வடிக்கும் பாசக் கண்ணீர்!

தந்தையின் அன்புக் கண்ணீர்! சொந்தத்தின்—சூழ்ந்து நிற்கும் பந்தத்தின் உறவு கண்ணீர்! பரத்தைவிடும் பசப்பு கண்ணீர்!

'ஓ! உலகத்தீர்! உயிரோடு உயிராய்; என் உணர்வோடு உணர்வாய் கலந்து விட்ட என் கணவன், எனை விட்டுப் பிரிந்தான், கொடுஞ்சாவு என் கணவனைக் கொண்டுபோய் விட்டது. 'கண்ணீரைத்துடைத்துக் கொள்' என்று எனைத்தேற்ற வந்தோரே! சுற்றத்தீர்! என் கணவன் எனை விட்டுப் பிரிந்தார். அந்த இடத்தை உங்களால் ஈடு செய்ய முடியுமோ? அம்மம்மா! முடியாதே!' என்று அவள் அலறி எழுப்பும் சோகக் கண்ணீர்!

ஆனாலும் இத்தனை ரகக் கண்ணீரையும் விட, சித்தத்தை உருக்கி ஆண் குலத்தை செயலற்ற ஜடங்களாக்கிவிடும் பருவ மங்கையின் உரிமைக் கண்ணீருக்குத்தான் சக்தி அதிகம் என்கிறது நமக்கிருக்கும் ஒப்பற்ற தமிழ் இலக்கியம் ஒன்று!

அணிதேர் புரவி ஆட்பெரும் படையின் வேகத்தையும் தணித்திடும் ஆற்றல் பெற்றதாம்!

வாள் தூக்கி, தோள் தட்டி, வாழ்வா, சாவா? வந்திடு களத்திற்கு என்று சூள் உரைத்துக் கிளம்பும் வீரனின் கோபக் கணலையும், குளிர்ச்சியடையச் செய்துவிடுமாம், குயில் மொழியாள் வடித்து நிற்கும் காதல் கண்ணீர்!

★

ஊரும், உறவினரும் அகலத் திறந்த விழிகளால் பார்த்துக் கொண்டிருந்த போதே-அவனுக்கும் அவளுக்கும் இல்லற ஒப்பந்தம்; இதய மாளிகையிலேயே நடந்தேறி விட்டது!

என்ன நெஞ்சழுத்தமப்பா அவனுக்கு, பாசத்தையும் — பற்றையும் அறுத்துக் கொண்டு நேற்று வந்தவளோடு பறந்து விட்டானே பாவி! இப்படி ஊர்வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்த போதே —

மீட்டிடும் நரம்பும் மீளா கானமும் எழுப்புகின்ற எழில் வீணையாகி விட்டது அவர்தம் வாழ்வு!

★

நாட்கள் உறங்கி உறங்கி விழித்துக் கொண்டிருந்தன.

பணப் பெட்டியும் திறந்து திறந்து மூடிக் கொண்டிருந்தது!

ஒரு நாள்! 'வறுமை உங்கள் வாழ்விலே புகுந்து விட்டது!' என்று சொல்லாமல் சொல்லி வாய் மூடிற்று அந்தப் பணப் பெட்டி, அதன் வயிறு காலியாகி விட்டதால்!

அவனிடமோ பொருள் இல்லை. கொடுத்து உதவுகின்ற அளவுக்கு அவன சுற்றத்தாரிடமோ அருள் இல்லை! மருள் சூழ்ந்துகொண்டது அந்த வாழப்பிறந்த மனிதனை!

பொருள் இல்லார்க்கு இந்தஉலகமே புழுதிமேடு, எனவே ஓடு! திரை கடலோடு! திரவியம் தேடு!

பிறகுதான் நாடு; வீடு, நீ கூடி மகிழ நினைக்கும் இல்லறத்துக் குயிற்பேடு!

இல்லை என்றால் எல்லாமே சுடு காடு தான், சூன்ய மேடு தான் என்று 'உலக அனுபவம்' அவன் செவிகளில் உரக்க சொல்லிக் கொண்டிருந்தது.

ஒரு நாள், 'போய் வருகிறேன் வடநாடு! என் பூங்குயிலே விடை கொடு!' என்று தலைவியிடம் முறையிட்டான் தலைவன்!

வடநாடா? அய்யய்யோ; அது வஞ்சகம் நிறை சுடுகாடாமே? வேண்டாம் அத்தான் என்று வேண்டி நின்றாள்,

'தங்கச் சிலையே! தமிழ்ப் பெண்ணு நீ! போகிற நான் தமிழனடி! இந்நாட்டு பூனைகூட, அந்நாட்டு புலிக் குட்டியைக் கொன்று போடுமே!

அச்சம்தவிர்; அதைரியத்தை கைவிடு; கனி இதழிலே புன்னகையை மிதக்க விடு! அந்தப் புன்னகையையே போர்க்கலன்களாக ஏந்திச் செல்கிறேன், பொருளோடு மீண்டு வருவேன்! என்றான்,

கட்டழகி கண்ணீர் வடித்தாள்! காத்திருப்பேன் அத்தான்—கண்கள் பூத்திடுவதற்குள் வந்திடுங்கள்—என் வாழ்வில் சுகம் தந்திடுங்கள் — என்று உரை சிந்தி நின்றாள்.

கடமை முடித்துவர தலைவன் புறப்பட்டான்!

காதல் அலைமோத, தலைவி குமுறி நின்றாள்!

தேர் வந்து நின்றது, தலைவன் தேரிலே ஏறி அமர்ந்தான்!

தேரிலே பூட்டப்பட்ட புரவிகள் தேரை இழுக்க; தேரிலே அமர்ந்து விட்ட தலைவனின் இதயத்தை— தேம்பி நிற்கும் தேன் மொழியாயாளின் காந்தக் கண்ணீர் பிடித்திழுக்க; பிரிய மனமில்லா அத்திருமகன், பாகனைப் 'போகாதே சற்று நில்' என்று சொல்வது போல் பார்க்க; இரக்க மேலீட்டால் அப்பாகனும் புரவிகளின் கடிவாளத்தை இழுத்துப் பிடிக்க ...! அத் தேர் அசையாமல் நின்றதாம்! அப்பப்பா...! அந்தக் காட்சிதனை உணர்ச்சிமிக்க ஓவியன் மட்டும் சித்திரமாக்கி விட்டிருந்தால்—அது உயிர் பறிக்கும் ஒப்பற்ற கலையாகவன்றோ ஆகியிருக்கும்!

ஆனாலும் அந்த காட்சிதனை நாவன்மை மிக்க புலவன் ஒருவன் சொல்லோவியமாக்கி — நம்மையெல்லாம் சுவைத்திட மட்டுமே விட்டிருக்கிறான்! அப்புலவன் நாவில் பொருந்திய சுந்தரச் சொற்செட்டு இதோ:

'' வினைநலம் படீஇ வருவதும்
அவ்வரைத்
தாங்கல் ஒல்லுமோ பூங்குழை
யோய் எனச்
சொல்லா முன்னர் நில்லா ஆகி
நீர் விலங்கு அழுதல் ஆனு
தேர் விலங்கினவால்
தெரிவை கண்ணே''

(குறுந்தொகை)

(வி)

காமராசருக்குக் காணிக்கை!

'' அடுத்தபடியாக தி. மு. க.வின் பேரில் காமராஜ் சுமத்துகிற குற்றச்சாட்டு மிகவும் விநோதமானது. ''அவர்கள் நாடகமாடுவோர்கள், நாடாள்வதாவது'' என்று கேட்கிறார். இருந்திருந்து பிடித்தாலும் புளியங்காம்பைப் பிடிக்கவேண்டும் என்னும் கதைபாக ஒரு அருமையான 'பாயிண்டை'க் காமராசர் பிடித்திருக்கிறார். இதற்காக அவரைப் பாராட்டவே வேண்டும்......

'' ஆந்திர நாட்டில் ஒரு மகாராஜா இருந்தார். அவர் கலைப் பிரியர். அவர் முன்னால் ஒரு சில இளைஞர்கள் சேர்ந்து 'சாரங்கதாரா' நாடகம் நடத்திக்கொண்டிருந்தனராம். அதில் சித்திராங்கி வேஷம் தரித்து ஒரு இளைஞன் அற்புதமாக நடித்தானும். அந்த இளைஞன்பேரில் மகாராஜாவுக்கு அபாரப் பிரியம் ஏற்பட்டு, அந்த இளைஞனின் படிப்பு எல்லாவற்றையும் தானே கவனித்துக் கொண்டாராம்.

அந்த இளைஞர்தான் இன்றைக்கு ஆசியாவிலேயே வயது முதிர்ந்த அரசியல்வாதியாகத் திகழ்ந்துவரும் ஆந்திரகேசரி கங்கத்தூரு — பிரகாசம் பந்துலுகாரு அவாகள். அவர் நாடகமாடியவர். அதனால்தானு சென்னை முதன் மந்திரி பதவியிலேயிருந்து அவரை விரட்டினார் காமராசர்!

அவ்வளவிற்குப் போவானேன்? காமராஜர் என்கிற பெயரை உலகுக்கறிவித்து அவரை அரசியல் வாதியாக்கிவிட்ட பெருமை வாய்ந்தவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள்.

சத்தியமூர்த்திக்கு நல்ல சங்கீதம், நாடகம் இவற்றில் அபாரப் பிரியம். கே. பி. சுந்தராம்பாள், எஸ். ஜி. கிட்டப்பா ஆகியோர் அவருக்கு அத்யந்த நண்பர். இதுமட்டுமல்ல; அவரே சில தடவைகளில் அரிதாரம், முத்துவெள்ளை தடவிக் கொண்டு நாடகம் நடித்துள்ளளர்.

காமராசருக்கு இவ்விஷத்திலும் சந்தேகமிருந்தால் 'தீரர் சத்தியமூர்த்தி' என்று பத்து வருடத்திற்கு முன்னால் ஒரு புஸ்தகம் வந்துள்ளது. அதில் வேஷம் போட்டபடியே இருக்கும் சத்தியமூர்த்தியின் படமும் வந்துள்ளது. தயவு செய்து அதையாவது பார்த்துக்கொள்ளட்டும் ''

—''சோஷலிஸ்ட்'' 8—7—56

சென்னை 20-7--56 வெள்ளி

தேர்தல் பிரச்சாரம்!

நாம் தேர்தலில் ஈடுபடப் போகிறோம் எனக் கேள்விப்பட்ட நேரத்திலிருந்தே காங்கிரஸ் வட்டாரம் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் முழு மூச்சாக இறங்கி யிருக்கிறது. அமைச்சர் பெருமக்கள் அதே வேலையாக நாட்டை வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். வளர்ந் திருக்கும் பிளவு உணர்ச்சிகளை அடக்கிட முடியாது எனத் தெரிந்தும், தேர்தல் வரையிலாவது அபிப்பிராய பேதங்களுக்கு இடமில்லாத வகையில் காங்கிரஸ்காரர்கள் நடந்து கொள்ள வேண்டு மென்று கூறி தட்சிணப் பிரதேசப் பிரச்சினைக்கு மூடிபோட்டு வைத்திருக்கிறார்கள்.

வடக்கே யிருந்து வருகிற கொழுப்பெடுத்த ஏகாதிபத்திய மூலவர் களும், இங்குள்ள குனிந்து கொடுக்கும் கங்காணிகளும், நமது பிரி வினை முழக்கத்தை—விடுதலை கீதத்தை—அலட்சியப்படுத்திய அகம் பாவ நிலையிலேயிருந்து மாறி, அழித்தொழிக்கும் முயற்சியிலே முனைந் துள்ளனர். 'வடக்கு—தெற்கு' எனப் பேசுவதெல்லாம் வரட்டு வாதம் என மேடைக்கு மேடை சொல்லுதிர்க்கின்றனர். ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விளம்பரங்கள் மிக விமரிசையாக பட்டி தொட்டிகளில், பட்டி னக்கரைகளில் நடத்தப்படுகின்றன. அதைப் பழுது பார்க்கிறோம்; இதைப் பழுது பார்க்கிறோம்—இந்த ஊரில் ஒரு சோலை; அந்த ஊருக்கு ஒரு சாலை—இப்படி யெல்லாம் மிடுக்காக வேலை பார்க்கக் கிளம்பி யிருக்கிறார்கள்.

எல்லாம் தேர்தல் தந்திரம் என்பதைப் பெரும்பாலான மக்கள் புரிந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

பாலமில்லாத ஆறுகள் பல இருக்க, காமராசர் போட்டியிட்ட குடியேற்றம் நகரில் பாலத்திற்குப் பக்கத்திலே பாலம் கட்டியது எதற்காக, என்பதை மக்கள் உணராமலில்லை. பேசிச் சிரிக்காமலு மில்லை.

காமராசருடைய சுற்றுப் பயணம் புயல் வேகத்தில் நடைபெறு கிறது. போகிற இடங்களில் எல்லாம் நம்மீது புழுதியை வீசவும் அவர் மறந்திடுதல் இல்லை.

தென்னகத்திற்கு ஓரவஞ்சனை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் ஐந்தாண்டுத் திட்டம்!

அந்த மூளிக் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு, முழு நிலவே! முத்தார அழகே! முல்லை அரும்பே!-என்றெல்லாம் வர்ணித் துக் கொண்டிருக்கிறார்கள், காங்கிரசார்!

ஆயிரங் கோடி ரூபாய்க்குமேல் நியாயமாக ஒதுக்கப்படவேண்டிய நிலைமையிலே தென்னாடு இருந்துங்கூட வடநாட்டவர் பெறும் தொகையிலே மிகச் சிறிய அளவுதான் நாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெறுகிறோம் என்பதைப் புள்ளி விபரங்களோடு சுட்டிக்காட்டி வருகிறோம். தேசீய ஏடுகள் அனைத்தும் மறைமுகமாக அந்த வேறு பாட்டை விளக்கியிருக்கின்றன.

வடக்கே ஒரு திட்டத்திற்குச் செலவழிக்கப்படும் தொகை, மூன்று எண்களுடையதாகவும்-தெற்கே செலவழிக்கப்படும் தொகை, இரண்டு எண்களையே எட்டிப்பிடிக்க மிகக் கஷ்டப்படக் கூடியதாகவும் அமைந் திருப்பானேன் என்ற கேள்வியை தென்புலத்தின் வளத்தில் அக்கரை கொண்ட அனைவருமே எழுப்பியிருக்கிறார்கள்.

தந்தது போதாதென்றுதான் நானூறு கோடியாவது கொடுங்கள் என்று மடியேந்திச் சென்றனர் மந்திரிகள்! அவர்கள் முகத்திலே கரிபூசி அனுப்பிவிட்டனர் டில்லிக் காவலர்கள்! தோல்வியுற்ற ஏக்கத்திலே ஐந்தாண்டுத் திட்டம் தென்னாட்டுக்கு நியாயம் வழங்கு வதாயில்லை யென்பதை எல்லா இடங்களிலும் அவர்களே எடுத்துரைத் தனர். அவர்களது பேச்சுக்கு கேலிச் சித்திரங்கள் வரைந்து வடக்கத்தி யாரின் போக்கை தேசீய ஏடுகள் கண்டித்தன.

இப்படியெல்லாம் அவர்களே அதிருப்தி கொண்டிருந்த ஒரு அரை குறைத் திட்டத்தை இன்று அவர்களே போற்றிப் புகழ்கிறார்கள் என்றால்—காரணம் என்ன?

நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம். 'தேசீயத்'தாரின் கண்துடைப்புத் திட்டங்களைப் பற்றிய விளக்கமளித்து மக்களைக் கண்விழிக்கச் செய் வோம்-என்ற கலக்கத்திலேதான் ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சாரத்தை அவ்வளவு அக்கரையோடு நடத்துகிறார்கள்.

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பொது மக்கள், போலி களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய நேரம். தூங்குகிற தோழர் களையும் தட்டியெழுப்பி, "உங்கள் தொடையிலே காங்கிரசார் கயிறு திரிக்கிறார்கள்—ஏமாந்து விடாதீர்கள்" என்று அறிவிக்கவேண்டிய பொறுப்பு மிகுந்த பணி நம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. காந்தியாரைக் காட்டி, அவரது படத்தைக் காட்டி, நேருவைக் காட்டி, அவரது வெளி நாட்டுப் பயணங்களைக் காட்டி மக்களிடம் வாக்குப் பெற்ற பழைய முறைகள் இனி செல்லாது எனக் கண்டு, ஐந்தாண்டுத் திட்டமென்னும் "மலட்டுக் காமதேனு"வை, ஓட்டை அட்சய பாத்திரத்தை மக்களிடம் காட்டித் தீரவேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

சீசர் எழுதிய இந்த சாசனம் ரோம சாம்ராஜ்யத்தையே வாழ்விக்க வல்லது—எனக்கூறி பெருந்திரளான மக்களைத் தன் பக்கம் திருப்பினா னும் ஆண்டனி! ஆனால் அவன் கையில் வைத்திருந்த அந்த சாசனச் சுருளிலே எதுவுமே எழுதப்படவில்லையாம். இப்படியும் ஒரு வரலாற்றுக் கற்பனை உண்டு. அதைப் போன்றதுதான் தென் னாட்டைப் பொறுத்தவரையில் இந்த ஐந்தாண்டுத் திட்டமும் என்பதை நாம் மக்களிடம் நாள்தோறும் எடுத்துக் கூறிட வேண்டியவர்களா யிருக்கிறோம்.

"ஐந்தாண்டுத் திட்டத்தை எதிர்ப்பவர்களா? அவர்கள் எல்லாம் ஆங்கிலேயனுக்கு யுத்தத்தில் உதவி செய்தவர்கள்! தேசத் துரோகிகள்!" என்று கர்ச்சிக்கிற காமராசர்களை நாமறிவோம்.

ஆனால் ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வதற் காக மாதம் ஒன்றுக்கு ஆயிரத்தைநூறுக்கு மேல் சம்பளம் பெற்று வாழும் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம், ஆங்கிலேயரை ஆதரித்து யுத்தப் பிரச்சாரம் செய்தவர் என்பதை நாடு மறந்துவிடவில்லை. மறந்தாலும் ஆங்காங்குள்ள நண்பர்கள் சுட்டிக் காட்டிடத் தவறிட மாட்டார்கள்.

ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சாரம்—அதற்கு அமோக விளம்பரம்—நகரும் மேடை—நாட்டியமாடித் திட்டத்தை விளங்கவைக்க நளினி கள்—எல்லாமே நாடெங்கும், நாள் தோறும் அனுப்பப்பட்டாலும், ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள்—ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அவலட்சணங்களை, அதன் பேரால், தென்னாட்டுக்குச் செய்யப்படும் அநீதிகளை—வசதிக்கு ஏற்றவாறு—கூட்டம் போட்டோ, குறவஞ்சிக் கூத்தாடியோ—துண்டுத்தாள் வெளியிட்டோ—சுவரொட்டியைக் காண்பித்தோ—விளக்கவுரையாற்றி காங்கிரஸ் மாயையிலிருந்து மக்களை விடுவிக்க முயல வேண்டும்.

பக்ரா நங்கல்-ஹீராகுட்-போன்ற வடநாட்டுத் திட்டங்களுக்கு வாரியிறைக்கப்படும் பணம் எத்தனை கோடி? இங்கே செலவழிக்கப் படும் தொகை எவ்வளவு? புள்ளி விபரங்கள், சுவர்களைப் பேச வைக்கட்டும்! நாக நாட்டு விடுதலை வீரனின் தலையைக் கொண்டுவர ஆணையிட்ட நேருவுக்குப் பெயர்தான் அகிம்சாவாதியா? இலங்கை யிலே இருபத்தைந்து தமிழர் பலியிடப்பட்டும் பதைத்தறியாத காமராசர் தான் பச்சைத் தமிழரா?

இத்தகைய வினாக் குறிகள் வீடெங்கும், ஊரெங்கும், நகரெங்கும், நாடெங்கும் மின்னட்டும்!

ஐந்தாண்டுத் திட்டமெனும் தூண்டில் போட்டு மக்களை வடநாட்டு வயிற்றுக்குள் தள்ளிவிடும் வஞ்சக நெஞ்சு கொண்டோரைப் படம் பிடித்துக் காட்டுவோம்!

எத்தர்கள்-எண்ணச் சுத்தமற்றவர்கள்-இனத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள்-அனைவரையும், மக்கள் மன்றத்துக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துவோம்! இதுவரையில் தித்திப்பு வாழ்வு நடத்தி விட்டு, ஏனென்று கேட்க நாம் கிளம்பியதும்-"தேகிடுதத்தம்" பேச ஆரம்பித்திருக்கும் தேர்தல் பிரச்சாரகர்களை-"தேசீய" கனம்களை-மக்கள் தீர்ப்புக்குப் பணிய வைப்போம்! கங்காணிகளைக் காட்டிக் கொடுக்கும் வேலை ஆரம்பமாகட்டும்! விடுதலை தாகத்தை அடக்க முனையும் விஷ விருட்சங்களை வெட்டித் தள்ளுவோம்!

அநீதியை விலக்கி-அடர்ந்த இருள் போக்கி-உண்மை ஒளி வழங்கிடும் உதய சூரியனாக ஒவ்வொருவரும் திகழ்வோம்!

நாடெங்குமுள்ள நல்லறிவாளர்களுக்கு இனி இதுதான் வேலை என்று ஆகவேண்டும்!

தேர்தல் பிரச்சாரத்திற்காகப் புறப்பட்டுள்ள "கனம்"களிடம் இனியும் திராவிட தேசம் ஏமாறாமல் எச்சரிக்கை வழங்கிடுவோம்!

வாழ்க திராவிடம்!
வீழ்க வடநாட்டு ஆதிக்கம்!!

ஆதிக்கபுரியினரின்
வாலை நறுக்கி எறிந்த ஜூலை 15!



தியாகிகளைத் தவிக்க விட்டு விடவில்லை தி. மு. கழகம்!

ஜூலை 15! இன்றைக்கு மூன்றுண்டுகளுக்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி முடிந்தும் முடியாமலுமிருக்கிற மும்முனைப் போராட்டத்தின் நினைவு நாளை இன்று நாம் கொண்டாடுகிறோம்.

தி. மு. கழகம், தன்னுடைய இலட்சியங்களை முன் வைத்து, மூன்று முனைகளில் ஒரு பெரும் போராட்டம் நடத்தியது—**1953**–ம் ஆண்டு, ஜூலைத்திங்கள், 15–ம் நாளன்று!

மூன்று–என்ற மூன்றெழுத்துச் சொல், தமிழ் நாட்டில் ஒரு தனிப் பெருமை வாய்ந்த சொல்லாக மாறிவிட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் மூன்று வேந்தர்கள்—சேரன், சோழன், பாண்டியன் என்ற பரம்பரையினர் ஆண்டிருக்கின்றனர்.

அவர்கள் ஆண்ட நாட்டினைச் சுற்றி மூன்று கடல்கள் இருந்திருக்கின்றன—இருக்கின்கின்றன.

மூன்று மன்னர்களுக்கும் மூன்று கொடிகள்—வில், கயல், புலி—என்று!

அந்த மன்னர்கள் வளர்த்த தமிழ் மூன்று—இயல், இசை, நாடகம்—என்று!

அந்தத் தமிழகத்தின் விடுதலைக்காக எழுந்துள்ள கட்சியும், மூன்றெழுத்துக்களாலானது—'தி.' "மு.' 'க.'–என்று!

அந்தக் கட்சிக்குக் கிடைத்த பெருமைக்குரிய தலைவர் அண்ணா—அந்தப் பெயரும் மூன்றெழுத்துக்களாலானது!

இப்படி—மூன்று, மூன்று—என்ற சொல் தமிழகத்தின் பெருமைக்குரிய சொல்லாக விளங்குகிறது.

அந்தப் பெருமைக்குரிய வகையில்தான், தி. மு. கழகம் நடத்திய போராட்டமும், மும்முனைகளில் நடைபெற்றது.

அந்தப் போராட்டத்தில், களம்பல கண்ட—'வடு'க்கள் பல பெற்ற வீரர்கள் ஈடுபட்டனர்—விழுப்புண் பல பெற்றனர்.

அதுபோன்ற விழுப்புண்களை—தழும்புகளைத் தடவிக்கொண்டே, 'அவை மீண்டும் ஓர் முறை நம் உடம்பிலே விழாதா? மீண்டும் அதுபோன்ற விழுப்புண்களை—தழும்புகளை ஏற்கிற போராட்டங்கள் வராதா? என்று, கண்களில் கனல் பொங்க வீரக் குரல் எழுப்பிடுவோர், கழகத்தில் இன்று ஏராளம்! ஏராளம்!

போராட்டம்–போர், போர்—என்ற சொல், கழகத்தவருக்கு பாயசத்தைவிட இனிப்பாக இருக்கிறது.

ஜூலை 15–முன்பு பாஸ்டிலி சிறை தகர்க்கப்பட்ட அதே நேரத்திலே ஆணவத் தலைவராம் ஆச்சாரியாரது இறுமாப்பைத் தகர்த்துப் பொடிப் பொடியாக்கி யிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்!

ஒருவரா, இருவரா? ஐயாயிரம் பேரல்லவா சிறைச்சாலையிலே அடைபட்டுக் கிடந்தனர்!

ஆறு உயிர்களை அல்லவா ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்குப் பலியாகத் தந்திருக்கிறோம்!

இதைத் தவிர அங்க ஈனமடைந்தவர்கள்தான் எவ்வளவு?

போருக்குப் போய் வருகிறேன் தாயே—என்று அன்னையிடம் கைகூப்பி விடை பெற்றுச் சென்ற சந்தனம் ஜோசப் திரும்பி வரும்போது, வாடா மகனே!—என்று வாழ்த்திய தாயை வணங்கிட முடியவில்லை; காரணம் ஒரு கையில்லை.

ராஜூ என்ற செபாஸ்டின் தன் குறியிடத்தில் துப்பாக்கித் தோட்டாவைத் தாங்கித் துவண்டு போனான்!

தூத்துக்குடியிலே காலிழந்தான், முருகேசன் என்னும் தோழன்!

அந்தத் தியாகிகளையெல்லாம் தவிக்கவிட வில்லை, திராவிட முன்னேற்றக் கழகம்!

அக்ரமக்காரர்களால் கொலை செய்யப்பட்ட மஜீதின் குடும்பத்தவருக்கு கரும்புத் தோட்டம் வாங்கிக் கொடுத்ததாயிற்றே நம் கழகம்!

அதே முறையில்தான் ஆண்குறி யிழந்த ராஜூ என்ற செபாஸ்டினுக்கும், கைமுடமான சந்தனம் ஜோசப்பிற்கும் நிதி அளித்து தன்னுடைய கடமையைச் செலுத்திற்று தி. மு. கழகம்.

ஆயிரம் ரூபாய்கள்— அற்பத் தொகைதான்— ஆனால் ஏழையருக்காக ஏழையர் தந்த தொகை அது!

பழைய சோறு ஆனாலும் தாய் எடுத்து ஊட்டினால் அதற்கு தனிச் சுவைதானே!

அந்த முறையிலே ஆயிர ரூபாய்களை துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பூவாளூரிலே பொதுக் கூட்டத்திலே அந்தத் தோழர்களுக்கு அளித்தார்.

'மழை ஓய்ந்தது; தூவானம் ஓயவில்லை' — என்பதைப்போல ஆச்சாரியார் 94–ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு இப்போது சுகமாக பசுல்லா ரோட்டிலுள்ள தனது பங்களாவிலே தூங்கிக் கொண்டிருக்கிறார். நாமோ பட்ட காயங்களுக்கு இன்னும் மருந்து தடவிக்கொண்டு வருகிறோம்.

சுட்டுத் தள்ளட்டும்; வெட்டி வீழ்த்தட்டும்; அதனால் விடுதலை வீரன் முன் வைத்த காலை பின் வைக்கமாட்டான் — என்பதற்கான அறிவிப்புதான் ஜூலை 15!

ஆலையிட்ட கரும்பாக வடநாட்டு ஆதிக்கத்தால் அல்லல்படும் திராவிடர்களின் உரிமைக் குரல் உலகதிர முழங்கிய நாள்தான் ஜூலை 15!

அந்த நாளை நமது விடுதலைச் சரித்திரத்திலேற்றிய தோழர்கள் அனைவருக்கும் — உயிர் கொடுத்த அறுவருக்கும்—அங்கங்களை அறுத்துக்கொடுத்த அத்தனை பேருக்கும் அஞ்சலி செய்கிறோம்!

தியாகம் செய்வதில் எம்மை முந்திக்கொண்டீரே நீவிர்— என்று பொறாமைப்படுகிறோம்!

★

பெயரை மாற்று---
'சுதந்திரம்' சொல்கிறது!

● ஜனநாயக ஆட்சியில் எதிர்க் கட்சிகளைக் கூடுமானவரை ஆளும் கட்சி அணைத்துச் செல்ல வேண்டும். அதட்டிப் பேசுவது முறையல்ல. நையாண்டி செய்வது நாகரிகமல்ல. எதிர்க் கட்சியினர் ஏதாவது குறைக்குப் பரிகாரம் தேடவந்தால், அந்தக் குறை நியாயமானதா, அநியாயமானதா என்பதை மட்டும் கவனிக்க வேண்டும். குறையை நிவர்த்தி செய்தால், பெருமை எதிர்க் கட்சிகளுக்கு மட்டும் போகாது. அதிகமாக ஆளும் கட்சியையே சேரும்.

ஆனால் இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் உள்ள நிலைமை என்ன வென்றால், எதிர்க் கட்சிகள் என்ன சொன்னாலும் சரி, "முடியாது" என்ற ஒரே பதிலைத் தருவது என்று ஆளும் கட்சி கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாய்த் தெரிகிறது......

● ● ...அப்படி மாறியதும் சரியே. சைனா பஜார் ரோடு, நேதாஜி போஸ் ரோடாயிற்று. பைகிராப்ட்ஸ் ரோடு, பாரதி ரோடு ஆயிற்று. நமது காரியாலயம் உள்ள பிராடீஸ் ரோடு, ராமகிருஷ்ண மடம் ரோடு ஆயிற்று.

அடையாற்றில் ஒரு பகுதி காந்தி நகர் ஆயிற்று. இன்னொரு பகுதி கஸ்தூரி பா நகராயிற்று. இவ்வாறு பெயர்களை மாற்றியதை வரவேற்கிறோம்.

அதைப் போலவே, டால்மியாபுரம் ஸ்டேஷன் பெயரை மாற்றுவதில் தவறில்லை. முன்பு மாற்றக் காரணம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இப்பொழுது முக்கிய காரணம் இருக்கிறது. டால்மியா என்பவர் இன்ஷியூரன்ஸ் கம்பெனிப் பணத்தில் ரூ. ஒன்றரை கோடியை ஏப்பம் விட்டதாக சமீபத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் ஒரு நாள் வைக்கப்பட்டு பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டவர். அவருடைய பெயரைத் தாங்கி இங்கே ஒரு ஸ்டேஷன் இருப்பானேன்?

இந்த நியாயத்தை ஆளும் கட்சி ஏற்று பழைய பெயராகிய 'கல்லக்குடி'யை அந்த ஸ்டேஷனுக்கு வைத்தால், குடி முழுகிப்போய் விடாது.

—'சுதந்திரம்'(6—5—56)

இலட்சியப் படம்!

அது மே மாதம். கொட்டும் பனியும் உயிரை வாட்டும் குளிரும் சர்வாதிகாரம் செலுத்தி வந்த காலம். சளியினால் வாடுபவர்கள்; இருமலுக்குப் பலியாகிறவர்கள் — இவர்களின் தொகைதான் அந்தச் சிற்றூரிலே அதிகமாக இருந்தது. போதாததற்கு நிமோனியா வியாதியும் சேர்ந்து கொண்டது.

நிமோனியா அப்போதெல்லாம் புதிய வியாதி. அதற்கு இரையானோர் தினந் தினம் மாதா கோவில் தோட்டத்திலே பிணமாக மாறிக்கொண்டே வந்தார்கள்.

நல்ல திடகாத்திரம் வாய்ந்தவர்களே அந்த வியாதி வந்தால் சோர்ந்து விழும்போது பாவம்; பூனையைப்போலிருக்கும் ஜான்சி என்ன செய்வாள்? புழுப்போலத் துடித்தாள். மூச்சுவிட முடியாமல் தவித்தாள்.

சியூ—அவள் உயிர்த் தோழி. ஏதாவதொரு ஆபத்து வரும்போதுதான் நட்பு ஆணிவேர் கொண்ட ஆலமரமா; அல்லது ஒரே ஆட்டத்தில் விழுந்துவிடும் அருகம்புல்லா—என்பது தெரிந்துவிடுமென்று கூறுவார்கள். ஜான்சியைப் பொறுத்தவரையில் சியூவைத் தோழியாகப் பெற்றிருப்பது அவள் நற்பயன்தான்!

இருவரும் வெவ்வேறு ஊர்களைச் சார்ந்தவர்கள். ஓவியம் கற்றுக்கொள்வதற்காக அந்தச் சிற்றூருக்கு வந்தார்கள். அவர்கள் பழக்கம் பத்து நாட்களுக்கு உள்ளிட்டதாகத்தான் இருக்கும். நட்புக்கு நாட்கணக்கு எதற்கு? அது ஒரு விசித்திரமான விதை. போதிய சீதோஷ்ண நிலை என்னும் சூழ்நிலைகள் வாய்த்துவிட்டால், அந்த வித்து அலாவுத்தீன் விளக்கிலே இருக்கும் பூதத்தின் ஆணைக்கு அடிபணிவதுபோல திடீரென்று வானோங்கி வளர்ந்துவிடும்; அதைப்போலவே திடீரென்றும் மடமடவென சரிந்துவிடும்.

சியூ நல்ல டாக்டர் ஒருவரைத் தருவித்தாள். தர்மாமீட்டரைப் பார்த்துக்கொண்டே டாக்டர் சொன்னார்; "இந்தக் கொடுமையான வியாதிக்கு ஒரே ஒரு எதிரிதானம்மா இருக்கிறான். அதுதான் மனத் தளர்வு. தீய கனவுகள்தான் அந்த மனத் தளர்வை ஏற்படுத்துபவை. அது வராமல் 'பேஷண்டை' உற்சாகப் படுத்திக் கொண்டிருங்கள்!"

டாக்டர் போய்விட்டார். சியூ ஓவியம் வரைவதற்காகத் துணியையும், தூரிகையையும் எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

ஆனால் திடீரென்று ஒரு ஓசை! ஆமாம்; ஜான்சி கிளப்பியதுதான்!

'பன்னிரண்டு'!—சிறிது நேரங் கழித்து 'பதினொன்று'; பிறகு 'பத்து'; 'ஒன்பது'; 'எட்டு'; 'ஏழு'—திறந்த ஜன்னலைப் பார்த்தபடியே ஜான்சி கூவிக் கொண்டிருந்தாள்.

ஜன்னலுக்கப்பால் அப்படி வாய் விட்டு எண்ணுவதற்கு என்ன இருக்கிறது? திறந்த வெளி: அதிலே ஒரு கொய்யாமரம்! அதைச் சுற்றிப் படர்ந்து கிடக்கும் திராட்சைக்கொடி! பரிதாபம்—அந்தக்கொடியில் இலைகள்கூட இல்லை; எல்லாம் உதிர்ந்து விட்டன; வெறிச்சென்று நிற்கிறது, மரம்! ஊருக்கெல்லாம் வந்ததைப் போல ஒரு சமயம் அந்த மரத்திற்கும் கொடிக்கும் நிமோனியா வந்து விட்டதோ என்னவோ?

"எதை எண்ணுகிறாய், ஜான்சி?" — சியூ வினயமாகக் கேட்டாள்.

"ஆறு!"—உரக்கக் கூறினாள் ஜான்சி. "அவைகள் வேகமாக அல்லவோ விழுந்து கொண்டிருக்கின்றன! மூன்று நாட்களுக்கு முன்பு அங்கே நூறு இருந்தது; அதை எண்ணி முடிப்பதற்கு எனக்குத் தலை வேதனையாய் இருந்தது. இப்போது எல்லாம் சுலபம்; அதோ இன்னொன்று விழுகிறது; அய்யய்யோ! இப்போது ஐந்தே ஐந்துதான் இருக்கின்றன!"

"ஐந்தா? என்ன அவை? சொல்லு ஜான்சி!"

"ஐந்து இலைகள்—உதிர்ந்து கொண்டிருக்கும் திராட்சைக் கொடியின் இலைகள். நேற்றுப் பச்சைப் பசேலென்று இருந்து, இன்று பழுத்துப்போன அந்த மஞ்சள் இலைகள்! அந்தக்கடைசி இலை விழும்போது, நானும் இந்த உலகத்தை விட்டே போய்விடுவேன்."

சியூ பயந்து விட்டாள். தீய கனவுகள் மனத் தளர்ச்சிக்குக் காரணமாகி ஆபத்தை விளைவித்துவிடுமென்று இப்போது தான் டாக்டர் கூறிச் சென்றிருக்கிறார். அவர் எது கூடாது எனச் சொன்னாரோ அந்த மன உளைச்சல் அல்லவோ ஆருயிர் ஜான்சியைப் பிடித்தாட்டுகிறது!

இருந்தாலும் சியூ மனதைத் தேற்றிக் கொண்டு, ஒரு அசட்டுச் சிரிப்பையும் வரவழைத்துக் கொண்டு, "இலைகள் விழுவதற்கும் உனக்கும் என்ன ஜான்சி சம்பந்தம்? பேசாமல் கஞ்சியைக் குடித்து விட்டுத் தூங்கு," என்றாள்.

ஆனால் ஜான்சியோ ஜன்னலை வெறித்துப் பார்த்தவாறே இருந்தாள். "எனக்குக் கஞ்சி குடிக்க நேரமில்லை. அதோ ஒரு இலை விழுகிறது. இன்னும் நாலே நாலு இலைகள்தான் மீதம் இருக்கின்றன. அவைகளும் இருட்டுவதற்கு முன்னால் விழுந்துவிடும்; அதோடு என் உயிரும் போய்விடும்!"

"தயவு செய்து எனக்காகக் கொஞ்ச நேரம் கண்ணை மூடித் தூங்கு, ஜான்சி! நான் படம் வரைந்து கொண்டிருக்கிறேன். நாளை காலைக்குள் கொடுத்தாக வேண்டும். இல்லா விட்டால் நான் ஜன்னலை மூடி விடுவேன்!"

"ஏன் சியூ! நீ வேண்டுமானால் பக்கத்து அறைக்குப் போயேன்!"

"உன்னை விட்டு விட்டா? ஊஹூம்! தயவு செய்து கண்ணை மூடு அம்மா!"—கெஞ்சிக் கேட்டாள் சியூ!

அந்த வார்த்தைகளிலே தொங்கிக் கொண்டிருக்கும் பாசத்திற்கு மதிப்பு வைக்க வேண்டுமே என்பதற்காக ஜான்சி கண்களை மூடி, தூக்கத்துக்கு அழைப்பு அனுப்ப சம்மதித்தாள்!

இருந்தாலும் உள்ளுக்குள்ளே இருந்து என்னவோ ஒன்று அவளைப் பேசும்படிக் கட்டாயப்படுத்திற்று.

"நான் தூங்க முயற்சிக்கிறேன். ஆனாலும் சியூ; அந்தக் கடைசி இலை விழப்போகும் சமயத்தில் என்னை எழுப்பி விடு. இல்லாவிட்டால் உயிர்போகும் சமயத்தில் உன்னைக் கடைசி முறை பார்க்காமலேயே போய் விடுவேன!"

"தூங்கு கண்ணே, தூங்கு! நான் சிறிது நேரம் கீழே சென்று படம் வரையப் 'போஸ்' கொடுப்பதற்காக பெர்மேனை அழைத்து வருகிறேன். அது வரையில் அந்தப் பாழாய்ப்போன இலைகளை எண்ணாமல் தூங்கடா கண்ணு!"—சொந்தத் தாய்க்கும் இல்லாத அன்புணர்ச்சியோடு சியூ அவளைத் தட்டிக் கொடுத்து, போர்வையால் இழுத்து மூடிவிட்டு பெர்மேனை அழைப்பதற்காகக் கீழே சென்றாள்.

பெர்மேன் அந்த வட்டாரத்து விசித்திர மனிதன்!

அவனும் ஓவியன்தான்—ஆனால் இப்போது அவன் ஓவியம் தீட்டுவதில்லை—அப்படித் தீட்டினாலும் அவை விலை போவதில்லை! எனவே அவன் மற்ற ஓவியர்களுக்குப் 'போஸ்' கொடுக்கும் 'மாடலாக இருந்து, வயிற்றை வளர்த்து வந்தான்!

பாவம்; பெர்மேன் வாழ்க்கையிலே படுதோல்விக்கு அடையாளம். நாற்பதாண்டுகளாக தூரிகையும், திரையுமாக அவன் காலத்தைக் கழித்திருக்கிறான். ஆனால் உலகம் அவன் திறமைக்கு மதிப்பு தந்து அவனையும் ஒரு ஓவியன் என்று கௌரவிக்க மறுத்து விட்டது.

முனை இருந்தது; முயற்சி இருந்தது—ஆனால் பணமில்லை. பின் எப்படி முன்னேற முடியும் அவனால்?

கடைசியாக சாராயம் அவனுக்கு மனச்சாந்தி வழங்கிற்று.

"என்னை யாரும் ஒரு ஓவியக்காரனாக மதிக்கவில்லை. இருக்கட்டும்; இருக்கட்டும்! ஒரு நாள் நான் என்னுடைய இலட்சியப் படத்தைத் தீட்டப் போகிறேன். அதைப் பார்த்துவிட்டு நீங்கள் எல்லோரும் மூக்கின்மேல் விரல் வைத்து மலைத்துப் போய் நிற்கப் போகிறீர்கள், பாருங்களேன்!"—இப்படியெல்லாம் குடித்துவிட்டுக் கூச்சல் எழுப்புவான் பெர்மேன்!

சியூ அவனை அழைக்கும் போதும் பெர்மேன் குடித்திருந்தான். சியூ உருக்கமாக ஜான்சிக்கு நேர்ந்த கதியைக் கூறினாள்.

"பைத்தியக்காரப் பெண்! இலைக்கும் உயிருக்கும் சம்மந்தமாவது—மண்ணாங்கட்டி!" என்று உறுமினான் "அன்புள்ள சியூ! நீ என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பது எனக்குத் தெரிகிறது. இருக்கட்டும். ஒருநாள் நான் என்னுடைய இலட்சியப் படத்தை வரையப் போகிறேன். அப்போது தான் நீ என்னுடைய பெருமையை உணர்ந்து கொள்வாய்"—என்று கூச்சல் போட்டபடி அவளை அழைத்துக்கொண்டு சென்றான் பெர்மேன்.

இருவரும் நுழையும்போது ஜான்சி அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

வழக்கம்போலவே பெர்மேன் கையில் ஒரு சுத்தியுடன் நிலக்கரி உடைக்கும் தொழிலாளியைப் போல 'போஸ்' கொடுத்தான்.

அதைப் பார்த்து சியூ படம் வரைந்து கொண்டிருந்தாள்.

அன்று வழக்கத்துக்கு மாறாக பெர்மேன் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

வேலை முடிந்தபிறகு ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான், பெர்மேன்!

அவன் முகத்திலே ஆயாசக் கோடுகள் தெரிந்தன—ஒரு கணம் மின்வெட்டுப் போல ஒரு பேரொளி தோன்றி மறைந்தது, அவன் முகத்தில்!

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

சென்ற இதழில்...

வெறி பிடித்து ஓடிவரும் சிவநேசர், டைகரின் பிடியில் சிந்தாமணி இருப்பதைக் கண்டு, மகள் மாசு படிந்தவள் என்ற எண்ணத்தால் தாக்குண்டு, இன்னும் பித்தம் அதிகமாகி உளறுகிருர். வீட்டை விட்டு ஓடிவந்த கணவரைத் தேடி ஓடிவரும் சிவகாமியும் சிந்தாமணியும் சந்தித்துக் கொள்கிருர்கள். டைகர் மூவரையும் வீட்டுக்கு அனுப்பி வைக்கிருன். பாலையூரில் மருத்துவ மனையில் நயினு முகம்மது, ஆனந்தியின் நித்திரை அழகை ரசித்துக் கொண்டிருக்கிருன். அப்போது ஓர் உருவம் கைத் துப்பாக்கியுடன் பலகணிப் பக்கம் அசைகிறது. அதை நயினு கவனிக்கவில்லை...... அப்போது......

12

யாரோ வரும் காலடி ஓசை கேட்கவே நயினு முகம்மது அவசர அவசரமாக ஆனந்தியின் படுக்கையை விட்டு அகன்று, பழையபடி தாழ்வாரப் பக்கம் வந்து விட்டான். அவன் உடலெங்கும் வியர்த்துக் கொட்டி உடைகள் எல்லாம் நனைந்து விட்டன. ஒரு பெண்ணைப் பற்றி, தானே ஒரு முடிவு செய்து கொண்டு, அந்த முடிவுக்கு அவள் ஒத்து வருவாளா என்று எதிர்பார்ப்பதும், அதற்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபடுவதும்—ஆண்மை மிக்க ஆடவர்களைக்கூட எவ்வளவு கோழைகளாக்கி விடுகிறது என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான். தாழ்வாரத்திலிருந்தபடியே, ஆனந்தியிருக்கும் அறைப் பக்கம் வருவது யார் என்று கவனித்தான். மற்ருெரு வாயிலின் கதவைத் திறந்து கொண்டு நர்ஸ் ஒருத்தி, கையிலே மருந்து சீசாவுடன் உள்ளே நுழைந்தாள். வந்தவள், ஆனந்தி நன்ருகத் தூங்குவதைப் பார்த்து, ஈன சுரத்தில் இரண்டு முறை கூப்பிட்டுப் பார்த்தாள். ஆனந்தி விழிக்கவில்லை. உடனே நயினு கதவோரத்தில் நின்றபடி, "என்னம்மா வேண்டும்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை. மருந்து கொண்டு வந்தேன். நல்ல தூக்கம். தொந்திரவு பண்ணக் கூடாது. தயவு செய்து விழித்தவுடன் என்னைக் கூப்பிடுங்கள். நான் வந்து மருந்தைத் தருகிறேன். இதோ...இந்த மேசையில் இருக்கட்டும் மருந்து!" என்று கூறிக் கொண்டே நர்ஸ், மருந்து சீசாவை மேசைமீது வைத்து விட்டு அதை விட்டு அகன்ருள். நயினு முகம்மது தாழ்வாரத்தில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் மனக்கண் முன்னே எழில் மயமான இன்ப எதிர் காலம் காட்சியாயிற்று. கண்களை அப்படியே லேசாக மூடிக் கொண்டு அந்தக் கற்பனைக் காட்சியை அனுபவிக்கத் தொடங்கினுன்.

அவன் தோற்பட்டையிலே இரண்டு இறக்கைகள் முளைக்கின்றன. வானத்திலே பறக்க ஆரம்பிக்கிருன். நட்சத்திரத் தோட்டம்—அந்த விண் மலர்ப் பூங்காவுக்ிடையே ஒரு தும்பி போல நீந்திச் செல்கிருன். நட்சத்திரப் பூக்கள் தங்களது செழிப்பான தலையைத் தாழ்த்தி அவனை அழைக்கின்றன. அவனுே எதையோ ஒன்றை நாடிப் பறக்கிருன். பளபளப்பான பட்டுப் பூச்சியொன்று வனப்பு மிக்க சிறகு பரப்பி அந்த நந்த வனத்தில் நடனமாடுகிறது. அதன் முகத்திலே ஆனந்தியின் முகம் பதிக்கப்பட்டிருக்கிறது. அவன் அவளோடு சென்று உல்லாச நடனம் புரிகிருன். இருவரும் நட்சத்திரச் சோலையைப் பிரிந்து இன்னும் மேலே பறக்கிருர்கள். வானத்தின் நீலக் கூறையைப் பிய்த்துக் கொண்டு அதற்கு மேலே பறந்து விடுகிருர்கள். கிழிபட்ட வானக் கூறையிலிருந்து நட்சத்திரங்கள் பொலபொல வென்று உதிர்கின்றன. புயல் காற்றில் "லஸ்தர் விளக்கு" ஆடுவது போல சந்திரன் அங்கு மிங்கும் ஆடிக் கொண்டிருக்கிருன். வான்முகட்டையும் தாண்டிப் பறக்கும் இன்ப லோகக் காதலர்களின் இறக்கைகள் திடீரென்று கழன்று விடுகின்றன. பறக்கும் சக்தியற்ற அவர்கள் தடார் என்று பூமியின்மீது வந்து விழுகிருர்கள்.

அதிர்ச்சியோடு கண் விழித்துப் பார்த்தால்—எல்லாம் கனவு என்று திரைப் படங்களில் காட்டுகிருர்களே; அது போன்ற கனவல்ல நயினு கண்டது!

ஆனந்தியும் தானும் வாழ்வில் ஒன்று பட்டுவிட்டால் குடும்பம் எப்படி நடத்துவது? —எந்த ஊரில் நடத்துவது?— குடும்ப வாழ்வு எவ்வளவு பொருத்த முடையதாக இருக்கும்?—ஒரு வேளை, டாக்டர் வேலை கூடத் தனக்குத் தேவையில்லையென்று ஒரு சாதாரண குடும்பப் பெண்ணுகவே இருப்பதற்கு ஆனந்தி திட்டம் போட்டு விடுவாளா?—இது போன்ற கேள்விகளுக்குப் பதிலைத் தேடிக் கொண்டுதான் முகக் கண்களை மூடிக் கொண்டு, அகக் கண்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டிருந்தான், நயினு முகம்மது!

அவன் தாழ்வாரத்தில் காதல் தவமிருக்கும் அந்தச் சமயத்தில்தான் பலகணிப் பக்கம் நின்றுகொண்டிருந்த கரிய உருவத்தின் கரம், பலகணித் திரையை விளக்கிக் கொண்டு ஆனந்தி படுத்திருக்கும் அறையின் உள்ளே நீட்டப்பட்டது. ஆனந்திக்காக நர்ஸ் மருந்து வைத்துவிட்டுப் போன மேசையின் பக்கம் அந்தக் கரம் எதையோ தேடிற்று. இறுதியில் எட்டாத தூரத்தில் இருந்த மருந்து சீசாமீது பட்டது. மருந்து சீசாவைத் தனக்கு அருகாமையிலே நகர்த்திக் கொண்டது. மேசையின் மற்ருெரு பகுதிக்கு மருந்து சீசா கொண்டுவரப்பட்டதும், மேசையிலே சீசாவை வைத்து விட்டு, கரம் பலகணிப் பக்கம் திரும்பச் சென்றது. மீண்டும் அந்தக் கரம் ஒரு சிறிய சிமிழுடன் சீசாவின் பக்கம் நீட்டப்பட்டது. அந்தச் சிமிழில் விஷம் என்று சிறிய எழுத்துக்களில் எழுதப் பட்டிருந்தது. மருந்து சீசாவினுள்ளே சிமிழ் சாய்க்கப்பட்டு, அதிலிருந்து ஒரு தூள் மருந்தில் கலக்கப் பட்டது. மருந்து இப்போது விஷமாகி விட்டது. கரிய உருவம் சற்று நேரம் அங்கு நின்று விட்டு, பிறகு ஓசைப்படாமல் அதை விட்டு அகன்றது. விஷம் கொட்டப்பட்டதும், சீசாவுக்குள்ளே மருந்து கொப்பளித்துக் கிளம்பி, மீண்டும் அடங்கி விட்டது. சிறிது நாழிகைக்குப் பிறகு ஆனந்தி புரண்டு படுத்தாள். புரளும் போது அவள் முனகிய ஒலி, தாழ்வாரத்திலிருந்த நயினுவைத் துடித்தெழச் செய்தது. உள்ளே வேகமாக ஓடி வந்தான். "என்ன வேண்டும்?" என்று பதைப்போடு கேட்டான். ஆனந்தி நயினுவைச் சிறிது நேரம் கண் கொட்டாமல் பார்த்தாள். அந்தப் பார்வையிலே வியப்பும், விசுவாச உணர்ச்சியும், குளிர்ச்சியும் நிறைந்திருந்ததை அவன் தெளிவாகப் புரிந்து கொண்டான். அவன் உள்ளத்துப் பூரிப்புக்கு அணை போட முடியாமல் தவித்தான்.

"நர்சு மருந்து கொண்டு வந்தாள். தூங்கியதால் எழுப்பாமல் போய் விட்டாள். எழுந்ததும் சாப்பிடச் சொன்னுள். தரட்டுமா?" என்று கேட்டான். அப்படிக் கேட்கும் போது அவன் தொண்டை அவனுக்குக் கட்டுப்படாமல் அடைத்துக் கொள்வானேன்? நாக்கிலே நடுக்கம் காணப்படுவானேன்? விசித்திரமான உணர்ச்சி! மிக விசித்திரமான உணர்ச்சி! அவனை ஆட்டிப் படைத்தது அந்த உணர்ச்சி!

ஆனந்திஎழுந்ததும் தன்னைக் கூப்பிடச் சொல்லியிருந்தாள், நர்ஸ்! அவனுே, அவளைக் கூப்பிட்டால் ஆனந்திக்குத் தன் கையால் மருந்து கொடுக்கும் வாய்ப்பை இழந்துவிட நேரிடுமே எனப் பயந்தான். ஆனந்தியும், மருந்தைச் சாப்பிடுவதற்குச் சம்மதித்துத் தலையை ஆட்டினுள். நயினுவின் மகிழ்ச்சி இரட்டிப்பு ஆயிற்று. அவனுக்கு என்ன தெரியும்; மருந்திலே விஷம் கலக்கப்பட்டிருக்கும் சேதி!

இந்தா; இந்த விஷத்தைச் சாப்பிடு—என்று சொல்வது போல அந்த மருந்தைச் சாப்பிடச் சொல்லப் போகிருன். அதற்காகத்தான் பாவம்; அவன் அவ்வளவு நேரமாகக் காத்துக் கிடந்திருக்கிருன்.

மேசையிலே இருந்த மருந்து சீசா, நயினுவின் இருதயத்திலே பெரியதோர் சூருவளியை எழுப்பி, அவன் ஆசை மாளிகையைத் தூள் தூளாக உடைத்தெறிந்து, அவனைத் தீயிலிட்டப் புழுவாகத் துடிக்கச்செய்ய தயாராய் இருப்பது போல் தோற்றமளித்தது.



நயினா, மருந்து சீசாவைக் கையிலே எடுத்துக் கொண்டு ஆனந்தியின் அருகே வந்தான். அருந்தியதும் அரை நொடியில் உயிரைப் போக்க வல்ல நஞ்சு அதிலே நன்றாகக் கரைந்திருந்தது.

“ம்! தரட்டுமா?” என்று அன்பொழுகக் கேட்டான் அவன்.

அவளும், “அய்யோ! என்னால் உங்களுக்கு வீண் சிரமம்” என்ற வார்த்தைகளை விழி மூலம்பேசியவாறு,மீண்டும்ஒரு முறை தலையசைத்தாள்.

அவளது மின்னும் செவ்விதழ்களின் பக்கம் சீசாவைக் கொண்டு போனான் நயினா,

ஆனால், அவள் படுத்திருந்த நிலை, மருந்தைக் குடிப்பதற்கு வாட்டமாக இல்லை. அதனால், அவன் மெதுவாக ஒரு கையால் அவள் தலையைச் சிறிது மேலே தூக்கியவாறு மருந்தை வாயருகே கொண்டு போனான்.

அவளும், மருந்தைப் பருக சீசாவை உதட்டில் பதித்துக் கொண்டாள். சீசாவை சாய்த்து,மருந்தை வாயில் ஊற்றிட முனைந்தான் நயினா. திடுக்கென சீசாவை அப்புறத் தள்ளி விட்டு, தலையை அப்படியும் இப்படியும் திருப்பி “விஷம்! விஷம்!!” என்று கத்தினாள் ஆனந்தி.

“என்ன? விஷமா?” என்றபடி சீசாவை முகர்ந்து பார்த்தான் நயினா. அவனுக்கு எதுவும் தெரியவில்லை. அவள் டாக்டர்! அதனால் அதைக் கண்டு பிடித்துவிட்டாள். நயினாவின் கைகால்கள் வீணை நரம்புகள் போல் அதிர்ந்தன.

“விஷம்! விஷம்!!”

நயினா வேறெதுவும் பேச முடியாமல் திணறினான்.

“ஏன் நடுக்கம்?......விஷயம் புரிந்துவிட்டதே என்றா? என்னைக்கொல்வதால் யாருக்கு என்ன பலன்? ஏன் இந்த வேலைசெய்ய வேண்டும்?...இப்போதே கூப்பிடச் சொல்லுகிறேன் போலீசை! எங்கும் ஓடாதே!” என்றவாறு ஆனந்தி, நயினாவின் கையை இறுகப் பிடித்துக்கொண்டாள். அவளுக்கு விபத்தினால் ஏற்பட்ட பலஹீனம்கூட எங்கேயோ மறைந்துவிட்டது. ஆனந்தி, தன் கையைப் பிடிக்க வேண்டுமென்று நயினா ஆவல் கொண்டிருந்தது என்னவோ உண்மை; ஆனால் இதுபோன்ற ஒரு பயங்கரச் சூழலில் அவள் கை அவன் மீது படுவது, அக்கினிக் கட்டை படுவது போலவேயிருந்தது.

நயினா, நின்றபடியே அவள் கால் பக்கம் தலையைச் சாய்த்துக் கொண்டு, தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான். என்ன பதில் கூறுவது என்றே அவனுக்குப் புலப்படவில்லை. எதைச் சொல்லி அவளை நம்ப வைக்க முடியும்?

“என்னை நம்பவேண்டும்! நான்...நான்...நான்...” என்று அழத் தொடங்கினான்,

“என்னை அப்படி நினைக்கிறாயா ஆனந்தி? விஷமிட்டுக் கொல்லுகிற அளவுக்கு உனக்கும் எனக்கும் என்ன பகை? யோசனை செய்து பார் ஆனந்தி!” என்று கதறினான்.

“நமக்குள்ளே பகையுமில்லை; உறவுமில்லை!......யாரோ அனுப்பியிருக்கிறார்கள்உம்மை, எனக்கு எமனாக!” என்று பதட்டத்தோடு அழுத்தந் திருத்தமாகக் கூறினாள் ஆனந்தி.

“அய்யோ! அப்படியெல்லாம் சொல்லாதே! உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டது முதல்—உன் உதார குணத்தை அறிந்தது முதல்–நல்ல உள்ளத்திற்குத் தலை வணங்கும் என் மனத்திலே நீ அழியாத ஓவியமாகி விட்டாய்! ஒரு நாள்! சில மணி நேரங்கள்! அதற்குள் நான் உன் அழகுக்கும், அன்புக்கும், அடிமையாகி விட்டதாகவே நினைத்துக் கொண்டேன். வாய்ச் சொற்கள் இல்லை. விழிகளும் மொழிகள் பரிமாற வில்லை—மௌன நிலையிலிருந்த உன் மோகன ரூபம் என்னை மயக்கிப் போட்டு



விட்டது! இந்த ஒருதலைக் காதல் பலிக்குமோ, பலிக்காதோ என்று துடித்துக்கிடந்தேன். ஒருமுறை உனக்கு பழரசம், அல்லது பால்–ஹார்லிக்ஸ், அல்லது மருந்து—ஏதாவதொன்றைத் தந்து உபசரிக்கிற அந்த மகிழ்ச்சிகரமான வேளை வராதா என்று எதிர் பார்த்துக் கிடந்தேன். அந்த நல்ல வேளை வந்தது—அது இப்படி நச்சு வேளையாக அமையுமென்று நான் கனவுகூடக் காணவில்லை ஆனந்தி!” என்று மனம் திறந்து பேசினான் நயினா.

“இவன் யார்? எங்கிருந்து வந்தவன்? இவன் ஏன் இவ்வளவு அக்கரையாக காலை முதல் மருத்துவ மனையில் தங்கித் தன்னைக்கவனிக்கவேண்டும்? எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும்; சதியை நிறைவேற்றலாம் என்றுதான் காத்திருந்தான் போலும்! இப்போது அழுகிறான். என்னைக் காதலித்ததாக வேறு கதைக்கிறான்! இவனை எப்படி நம்புவது? ஒரே குழப்பமாயிருக்கிறதே! முன் கூட்டியே சதித்திட்டம் வகுத்திருந்தால் கூட—காலையில் இப்படி ஒரு விபத்து ஏற்படும்; ஆஸ்பத்திரிக்கு வருவேன்—அங்கே விஷங் கலக்கலாம் என்று இவன் எப்படி யூகித்து முடிவு செய்திருக்க முடியும்? ஒரு வேளை, இப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகு யாராவது இந்த நிலைமையைப் பயன்படுத்தி, கார் விபத்தின் மீது சாக்குப்போட்டு என்னைத் தீர்த்துவிடக் கருதியிருக்கலாமோ? அப்படியானால் ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள் யாராவது இதற்கு உடந்தையாக இருக்க வேண்டும்.”

—இவ்வாறு பலப்பல எண்ணி ஆனந்தி குழப்ப மடைந்தாள்.

நயினாவோ ஆனந்தியின் மனதிலே தன்னைப் பற்றியுள்ள தவறான எண்ணத்தை மாற்றி விட வேண்டுமென்று தத்தளித்தான்.

“நான் ஒரு குற்றமும் அறியாதவன் ஆனந்தி! பெண் பார்க்க என் நண்பனுடன் வந்தேன். வந்த இடத்தில் என் நண்பன் மனமுடைந்து போனான். நீ குறுக்கிட்டாய்! விபத்து நம் இருவரையும் சந்திக்க வைத்தது. எங்கேயோ ஒரு மூலையில் பதுங்கிக் கிடந்த நினைவுகளைத் தட்டி யெழுப்பி என்னை இங்கேயே தங்கி விடுமாறு கட்டிப்போட்டது உன் சௌந்தர்யம்! வெளிப்படையாகவும், துணிச்சலாகவும் உன் அபிப்பிராயத்தின் விளிம்பைக் கூடத் தெரிந்து கொள்ளாமலும் நான் இப்படிப் பேசுவதற்காக மன்னித்து விடு! என் காதல் தெய்வத்துக்கு நான் விஷம் கொடுத்துக் கொல்ல நினைப்பேனா?”

இதை சொல்லியவாறு முகத்திலே அறைந்து கொண்டு அலறினான் நயினா.

ஆனந்திக்குக் கலக்கமும், குழப்பமும் போட்டி போட்டு எழுந்தன. சற்று நேரம் அசைவற்று இருந்தாள். அவள் விழிகள் எதிரேயுள்ள சுவற்றின் மீது பதிந்திருந்தன. நயினாவும் அவளையே பார்த்தவாறு நின்றான். அவன் கண்களிலே நீர் பெருக்கெடுத்தவாறு இருந்தது. “ஆனந்தி!” என்று கூப்பிட்டான். அதில் பாசம், பரிவு, பயம், பக்தி, அனைத்தும் அடங்கியிருந்தது.

ஆனந்தி திரும்பினாள். மருந்துச்சீசா இருந்த மேசையைஉற்றுப் பார்த்தாள். ஏதோ ஒரு பொருள்! ஆம்; அந்தச் சிறிய விஷச் சிமிழ்! அதுதான் இருந்தது!

“அதை எடுங்கள்!” என்றாள் ஆனந்தி. அவள் குரலிலே நயம் இருந்தது இப்போது! நயினா, ஓடிப்போய் அந்தச் சிமிழை எடுத்து ஆனந்தியிடம் கொடுத்தான். அதை அவள் நன்றாகக் கவனித்தாள். அது அவளது ஆஸ்பத்திரியிலே இருந்த சிமிழ்!

அந்த அடையாளத்தைக் கண்டு பிடித்து விட்டாள்!

“அது எப்படி இங்கு வந்திருக்கும்?”—இந்த கேள்விக்கு அவளால் உடனே பதில் கண்டு பிடிக்க முடியவில்லை.

“டைகர் இங்கு வந்தாரா?” என்று நயினாவிடம் கேட்டாள்.

“பகலில் வந்ததுதான்—இரவில் வரவில்லை!” என்றான் அவன்

“நான் உங்கள் மீது தவறாக சந்தேகப்பட்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.” என்றாள். அவள் கண்களில்

★ தொடர்ச்சி 12ம் பக்கம்

நூலேணி

கலைக் கோயில் (மதுரை)---பொன் விழா மலர்

ஆசிரியர் : ரவி.

கவிஞர் ரவி அவர்கள் ஆசிரியராக பொறுப்பேற்று நடத்தும் கலைக் கோயில் என்ற திங்கள் இருமுறை இலக்கிய ஏட்டின் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர் கிடைக்கப் பெற்ளோம். விழாவினைக் காணுதார் கண்டது போன்ற ஆறுதலைப் பெற முடிகிறது. மலரைச் சுவைத்த பிறகு! ரவியின் தமிழ் நடை நம்மைக் கவருகிறது. அறிஞர் பெரு மக்களின் சொற்பொழிவுகள் நல்ல முறையில் சுருக்கித் தொகுத்தளிக்கப்பட்டிருக்கிறது.

அறுசுவை உணவு வழங்கப்படும் இடத்தில் நரகலுக்கும் இடம் தந்தாற் போன்று முத்துராமலிங்கத் தேவரின் முறை கெட்ட பே (ஏ) ச்சை மலரில் வெளியிட்டிருப்பது மிக மிக வருந்தத் தக்கது. இதற்கு ஆசிரியரே வருத்தம் தெரிவித்திருக்கிறார். பாராட்டுகிறோம். அத்துடன் ஞானசம்பந்தரைப் பற்றி அண்ணு குறிப்பிட்டிருக்க வேண்டியதில்லை யென்று 'கலைக்கோயில்' தீர்ப்பளிப்பது நமக்கு வேதனை கலந்த வேடிக்கையாகவே இருக்கிறது!

விலை ஆறணு.

○○

தமிழகச் சான்றோர் திரு. வி. க.

எழுதியவர் : தி. மா. பரமசிவம்.

இந்திய உப கண்டத்திலேயே முதன் முதலாகத் தொழிற் சங்கம் அமைத்தவர் திரு. வி. க. ஆனல் வட நாட்டு நூலாசிரியர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பது பேர்கள் இந்த உண்மையை மறைத்து, யாரோ வாடியா என்பவரின் தனிப்பட்ட சாதனை அது—என சாதிக்கின்றனர். அந்த அளவுக்கு நம்மவர்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டு வரும்போது இது போன்ற வாழ்க்கை விளக்க நூல்களின் அவசியத்தை நாம் வற்புறுத்த வேண்டியதில்லை. டாக்டர் மா. இராச மாணிக்கனரும், டாக்டர் வரதராசனரும் இதற்கு மதிப்புரை வழங்கியுள்ளனர். மு. வ. கூறியிருப்பதுபோல இந்நூல் 'அளவிற் சிறியது ஆயினும் உணர்ச்சியில் பெரியது' ஆகும்.

விலை : எட்டணு

கிடைக்குமிடம் :

அறிவு நூல் நிலையம்,
405, பெரியகடை வீதி, திருச்சி.

○○

கோழிப் பந்தயம்

எழுதியது : அரு. ராமநாதன்.

'காதல்' ஆசிரியர் அரு. ராமநாதன் தீட்டிய எட்டு சிறு கதைகள் டாக்டர் மு. வரதராசனரின் முன்னுரையுடன் நூல் வடிவு பெற்றிருக்கின்றன. பல்வேறு கோணங்களில் வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே படம் பிடிக்கும் ஆசிரியரின் ஆற்றல் போற்றுதற்குரியது.

டாக்டர் மு. வ. கூறியிருக்கிறபடி 'கதைகள் கற்பவரின் நெஞ்சைத் தம் வயப்படுத்த வல்லவை'! மொத்தத்தில் இந்நூல் ஒரு சிறு கதை விருந்தாகவே அமைந்திருக்கிறது.

விலை : ரூ. 1—4—0

கிடைக்குமிடம் :

பிரேமா பிரசுரம்,
சென்னை—24.

○○

பச்சை மாளிகை மர்மம்!
மலையாளச் சீட்டின் மர்மம்!

எழுதியவர் : மேதாவி.

துப்பறியும் கதைக்கு இருக்க வேண்டிய விறுவிறுப்பு, அடுத்து என்ன என்று எதிர்பார்க்கச் செய்யும் தன்மை—இவை நிறைய இருக்கின்றன, இந்த இரு நாவல்களிலும்!

விலை : முறையே ரூ. 1—4—0, 1—8—0.

கிடைக்குமிடம் ;

பிரேமா பிரசுரம்,
சென்னை—24.

இலட்சியப்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

வெளியே தலைகாட்ட முடியவில்லை—ஒரே பனிப்புயல்! அடர்ந்த மழை!

திடீரென்று சியூவைப் பார்த்து பெர்மேன் கேட்டான்; "ஜான்சி என்ன சொன்னுள்?"

"கடைசி இலை விழும்போது என்னுடைய உயிரும் போய்விடும்—என்று கூறினுள்"

"கிடக்கிருள் பைத்தியக்காரப் பெண்!"—போய்விட்டான், பெர்மேன்!

★

மறுநாள் அதிகாலை நேரம். ஜான்சி கண்விழித்ததும் விழிக்காததுமாக சியூவை எழுப்பி ஜன்னல் கதவைத் திறக்கச் சொன்னுள்.

முன்னுள் இரவு பெரும் பனிப்புயல் வீசியதும், அடை மழையும் பெய்ததும் அவளுக்குத் தெரியும்.

அதில் மீதமிருந்த நான்கு இலைகளும் விழுந்திருந்தால்...?

இலைகள் இல்லாததைக் கண்டு ஜான்சியும் அதிர்ச்சியடைந்து வீழ்ந்து விட்டால்...?

—சியூ தயங்கினுள்.

"இப்போது கதவைத் திறக்கப் போகிருயா? இல்லை நான் எழுந்து வரட்டுமா?"—ஜான்சி கூவினுள்.

அவள் பிடிவாதக்காரி என்பது சியூவுக்குத் தெரியும். கண்களை மூடிக்கொண்டு எதற்கும் தயாராானவளாய் சியூ கதவைத் திறந்தாள்.

என்ன விந்தை-ஒரே ஒரு இலை மட்டும் புயலையும் மழையையும் தாங்கியபடி அசையாமலிருந்தது!

இதைக் கண்டதும், ஜான்சிக்கு மகிழ்ச்சி தாளவில்லை. "சியூ! நான பிழைத்துக் கொள்வேன! பிழைத்துக் கொள்வேன்!! நீ போய் கஞ்சி கொண்டுவா!"—கூவினுள் ஜான்சி!

என்றைக்குமில்லாத அளவு அன்று அளவுக்கு அதிகமாகக் கஞ்சியைக் குடித்தாள், ஜான்சி!

"காற்றிலும் மழையிலும் அந்த இலை சாய்ந்து விடுமென்று நினைத்தேன். ஆனல் அது விழவில்லை, அது குருத்து இலை. லேசில் விழாது. நானும் லேசில் சாக மாட்டேன்!" — குழந்தையைப் போல் கூவினுள் ஜான்சி!

டாக்டரும் வந்தார். ஜான்சியின் குதூகலத்தைக் கண்டு அவரும் மகிழ்ச்சியிலாழ்ந்தார்.

ஆனல் அன்று டாக்டர் அதிக நேரம் தங்கவில்லை. "நான் கீழே ஒரு 'பேஷண்டை'ப் பார்க்க வேண்டும், அம்மா! அவன் பெயர் பெர்மேனும்-அவனுக்கும் இதே நிமோனியாதான்! ஆனல் அவன் பிழைப்பது சிரமம்!"—என்று கூறிப் போய்விட்டார்.

பாவம்; பெர்மேன் மிகவும் நல்லவன். நல்லவர்கள்தானே சீக்கிரம் இந்த உலகத்தைவிட்டுப் போய்விடுகிறார்கள்!

மறுநாளும் டாக்டர் வந்தார். "ஜான்சி! உனக்கு ஒன்றுமில்லை. சாவு தோற்றுப்போய் விட்டது" — என்றார். ஆனல் திடீரென்று அவர் குரலை சோகம் கப்பியது. மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

"ஆனல் சாவு பெர்மேன் விஷயத்தில் வென்றுவிட்டதம்மா! இரண்டு நாட்கள்தான் ஜுரமாக இருந்தான்; ஆனல் செத்துவிட்டான... கடைசி நாளன்று இரவு அவன் வீட்டு வாசற் புரத்தில் பனியில் நனைந்தபடி விழுந்து கிடந்தானும். அதன் விளைவு தான் காய்ச்சல்! பனி மழையில் நனைபவர்கள் நிமோனியாவிற்குத் தப்ப முடியுமா? கையில் ஒரு அரிக்கன் விளக்கு எரிந்து கொண்டே இருந்ததாம். பக்கத்திலே ஒரு ஏணி கிடந்ததாம். இன்னொரு கை நிறைய பச்சை வர்ணத்தில் தோய்க்கப்பட்ட தூரிகைகள் இருந்தனவாம்!.... சாவதற்கு முன்கூட அவன்; "என் இலட்சியப் படம்' அமர ஓவியம்! ஜான்சி!...திராட்சை இலை!..." என்று சப்தம் போட்டதைக் கேட்க பரிதாபமாக இருந்தது"

—டாக்டர் சொல்லி முடித்தது தான் தாமதம்; ஜான்சி துள்ளிக் குதித்து எழுந்தாள்!

"ஜான்சி; திராட்சை இலை—என்று கூறினு பெர்மேன்"—என்றவாறே அவள் ஜன்னலருகில் ஓடினுள்—எல்லோரும் ஓடினர்கள்.

அந்தக் கடைசி திராட்சை இலை காற்றில் அசைந்தபடியே இருந்தது—

"சியூ, சியூ! இதோ பார்—பெர்மேனின் இலட்சியப் படம்—அமர ஓவியம் அதுதான்!"—இதயத்தின் அடித் தளத்திலிருந்து வெளிவந்தன இந்த வாசகங்கள்!

ஆமாம்! பனியில் நனைந்து கொண்டு, ஏணியில் ஏறி நின்று, குளிர் ஜுரத்தையும், அதன் மூலம் சாவையும் வரவழைத்தபடி ஒரு கையில் அரிக்கன் லாந்தரையும், மறு கையில் தூரிகையையும் பிடித்தவாறு மரக்கிளையில் அவன் எழுதி ஒட்டினனே அந்தத் திராட்சை இலைதான் வாழ்க்கையில் தோல்வியைத் தவிர வேறொன்றுமறியாத பெர்மேனின் இலட்சியப் படம்! அமர ஓவியம்! பாவம்; அதை எழுதி முடிக்க அவன உயிரையே செலவிட்டிருக்கிறன!

[மூலம்: ஓ ஹென்றி
தமிழில்: மாறன்]

★

விற்பனையாகிறது!

"பொர்மன் புகழிலும் போட்டி"

(மூவர்ண அட்டைப் படம்)

விலை 2 அணு

விற்பனைக் கழிவு 25 சதவீதம்.

தமிழன் பதிப்பகம்,
கிருஷ்ணகிரி.
(சேலம் மாவட்டம்).

★ நாக நாட்டில் எரிமலை ! ★

பல்லாண்டு காலமாக வேரூன்றி வளர்ந்து – இன்று ஏக இந்தியக் கோட்டையை இடித்துத் தள்ளும் அளவுக்கு வலிமை பெற்றிருக்கும் நாகர் விடுதலைக் கிளர்ச்சியின் மூல பலம் எது? நாடோடிகளாய்த் திரிந்து காட்டுமிராண்டி வாழ்வு நடத்துபவர்களுக்கு உரிமை பற்றிய உணர்வு, தனித்து வாழ்வதின் பெருமை– போன்றவை எப்படித் தோன்றின?

—இராமன் ஆண்டால் என்ன; இராவணன் ஆண்டால் என்ன என்று கருதி குடும்ப விவகாரங்களில் மூழ்கிக் கிடக்கும் நாகரிக மனிதர்களுக்கு இந்தக் கேள்வி எழுவதில் வியப்பு ஒன்றும் இருக்க முடியாது.

விடுதலை வித்து !

வேடிக்கையாகச் சொல்வதுண்டு—ஆங்கிலேயர்கள் பிற நாடுகளுக்கு ஏகாதிபத்திய அமைப்பு முறையை மட்டும் கொண்டு செல்வதில்லை; அதன் எதிர்ப்பு உணர்ச்சிக்கான வித்துக்களையும் கொண்டு செல்லுகிறார்கள், என்று!

இதுதான் உண்மையும் கூட!

வெள்ளையர்கள் நுழைவோடு பாதிரிகளும் நுழைகிறார்கள். அவர்கள் ஜெபமாலையை உருட்டுவதோடு நின்றுவிடுவதில்லை. ஆங்காங்கே கல்விச் சாலைகளை நிறுவுகிறார்கள்.

அறியாமை இருள் அகலும் போது விடுதலை பற்றிய கருத்துக்களும் முளை விட ஆரம்பிக்கின்றன.

இந்திய உப கண்டத்துச் சுதந்திரப் போராட்டத்தை எடுத்துக் கொண்டால்கூட ஆங்கிலக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தவர்கள்தான் முதன் முதலாக வெளி நாட்டவர்கள் ஆதிக்கத்தைத் தகர்த்தெறியும் போர் வீரர்களாக மாறினார்கள். காங்கிரசின் தலைவர்களுள் பலரும்—காந்தியார், சுபாஷ், நேரு உட்பட எல்லோரும் ஆங்கிலக் கல்வி நிலையங்கள் தயார் செய்த தளபதிகள்தான்!

இதே கதைதான் நாக நாட்டிலும் நடைபெற்றிருக்கிறது.

பாதிரிகள் பலன் !

இன்று இந்தியச் சிப்பாய்கள் நுழைய முடியாமல் தவிக்கும் அந்த மலைச்சிமையிலே அமெரிக்கப் பாதிரியார்கள் நுழைந்து பல பள்ளிக்கூடங்களை நிறுவியிருக்கிறார்கள்; பல நாகர்களைக் கிருஸ்தவர்களாக மாற்றியிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் இன்று விடுதலைக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்து நடத்தும் தளபதிகளில் பெரும்பாலோர் கிருஸ்தவர்கள். ஏன்; பிசோ கூட ஒரு கிருஸ்தவர்தான்!

அவர் அமெரிக்கப் பாதிரிமார்கள் நிறுவிய பள்ளியிலே கல்வி பயின்றவர். ஒரு முறை அவர் அமெரிக்காவுக்குக்கூட சென்று வந்திருக்கிறாராம்!

ஐ. என். ஏ. வில் பிசோ !

இன்னுமொரு ருசிகரமான தகவல்!

சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவம் நிறுவி வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டார் அல்லவா; அந்த ஐ. என். ஏ. படையில் பிசோவும் ஒரு போர் வீரராகப் பணி புரிந்திருக்கிறார். அப்போது தான் பிசோவுக்கும் அரசியலுக்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டதாம்!

அன்று முதல் இன்றுவரை பிசோவுக்குள்ள நாட்டுப் பற்றும் வீர உணர்வும் குறைந்த பாடில்லை. நாக நாட்டிலுள்ள நாகர்கள் அனைவரும் அவரைத் தலைவராக ஏற்று, அவரது ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கத் தயாராக இருக்கிறார்கள்; உயிரைப் பணயமாக வைத்து மானத்தை மீட்கப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தேர்தல் !

அதன் தொடர்ச்சியாக 1951–ம் ஆண்டிலே நடைபெற்ற நிகழ்ச்சி நம்மில் பலருக்குத் தெரிந்திருக்காது.

அந்த ஆண்டிலே நாகநாடு முழுவதும் ஒரு தேர்தல் நடந்தது. சட்ட சபைக்காகவோ, அல்லது பாராளு மன்றத்துக்காகவோ அல்ல!

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் கூடிய தி. மு. க. மாநில மாநாட்டில் அறிவித்தார் அல்லவா; "விரைவில் நான் திராவிடநாடு பிரிய வேண்டுமா; வேண்டாமா என்பதற்குத் தேர்தல் வைப்பேன்; மக்களது அபிப்பிராயம் இது பாரீர் என்று உலகத்திற்கு அறிவிப்பேன்!" என்று முழங்கினாரே, அதைப்போன்ற தேர்தல்தான் 1951–ம் ஆண்டிலே நாக நாட்டிலே நடைபெற்றது.

"நாக நாடு வேண்டுமா? வேண்டாமா?"–தேர்தல் மூலம் நாகர்களைப் பார்த்து இந்தக் கேள்வி கேட்கப்பட்டது.

விடை விடுதலை வேண்டுமென்று இருந்தது. அதன் விளைவுதான் இப்போது புது வேகத்துடன் நடைபெறும் போராட்டம்!

—இப்படியெல்லாம் பல ஜனநாயக வழிகளில் பிரயாணம் செய்து நாகர் தளபதியாய் விளங்கிவருகிறார் பிசோ!

எந்த நேரத்திலும் அவரது ஆணையை ஏற்று நடக்க அசகாய சூரர்கள் பலர் காத்திருக்கின்றனர்.

தலை வணங்கவில்லை !

இப்படித்தான் ஒரு முறை இந்திய அரசினரின் கீழிருக்கும் பள்ளிக்கூடமொன்றில்பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கூட்டத்தின் துவக்கத்தில் பள்ளித் தலைமையாசிரியர் இந்திய தேசியக் கொடியை கம்பத்தில் ஏற்றிவைத்து, "தாயின் மணிக்கொடி பாரீர்! அதற்குத் தாழ்ந்து பணிந்திட வாரீர்!" என்று எல்லோரையும் 'சல்யூட்' செய்வதற்கு அழைத்தார்!

முதலில் அழைத்தார்; பிறகு ஆணையிட்டார்.

பலன்? மாணவர்கள் கடைசி வரை இந்திய தேசியக் கொடிக்கு வணக்கம் தெரிவிக்கவே இல்லை.

இந்திய உபகண்டம் எங்களுக்கான நாடு அல்ல; இந்த தேசியக் கொடியும் எங்களுடையதல்ல!—என்று மறுத்துரைத்து விட்டார்கள்.

இந்திய அதிகாரிகளா சும்மா இருப்பார்கள்? அடக்கு முறை தர்பார்கள் பல நடத்தி பாமர மக்களை ஒடுக்கும் வழிகளில் வல்லவராம், வெள்ளையரின் சிஷ்யர்கள்ல்லவா அவர்கள்? "நீங்கள் தேசியக் கொடிக்கு வணக்கம் தெரிவிக்கும்வரை நாங்கள் பள்ளியைத் திறக்க மாட்டோம் — என்று கூறி இழுத்துப் பூட்டிவிட்டார்கள்.

பிசோவும் அவரது படை வீரர்களும் இந்த உத்தரவு பிறப்பித்த இருபத்தி நான்கு மணி நேரத்துக்குள்ளாக வேறொரு பள்ளிக்கூடம் திறந்தார்கள். "நாகநாட்டின் இன்றைய குழந்தைகளே! வருங்காலத்து மன்னர்களே! இதோ இருக்கிறது உங்கள் கல்விச் சாலை. ஆனால் இங்கேயும் நீங்கள் வணக்கம் செலுத்தியே தீர வேண்டும்; தேசியக் கொடிக்கல்ல; உங்கள் தேசத்துக்கு! அதன் விடுதலைக்கு!"—என்று இடி முழக்கம் செய்தார்கள்!

—இந்திய அரசாங்கம் நினைத்ததைப்போல நாக நாட்டுக்

★ தொடர்ச்சி 10–ம் பக்கம்

புரட்சிக் கவிஞர்

பிசோ—அவர் ஒரு போர்வீரர்; பயங்கரவாதி; எப்போதும் தலை மறைவாய் இருந்து தீரவேண்டிய அவசியத்திலிருப்பவர்!

ஆனால் அவர் ஒரு கவிஞரும்கூட!

கவிஞரென்றால் பக்திப் பாசுரங்கள் பாடும் பழமைக் கவிஞரல்ல; புரட்சிக் கவிஞர்!

ஆமாம்; சுதந்தர நாக நாட்டுக்கான தேசிய கீதத்தை பிசோவே இயற்றியிருக்கிறாராம்! அந்த விடுதலைக் கீதம்தான் இன்று நாக மலைத்தொடரில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

வில்வம் - அருண்மொழி திருமணம்

பொதுச்செயலாளர் தலைமையில் சிறப்புற நடைபெற்றது

தோழர் ஏ. கே. வில்வம்—தோழியர் அருண்மொழி வாழ்க்கை ஒப்பந்த விழா சென்னை கோகலே மண்டபத்தில், சென்ற 14—7—56 அன்று மாலை 5–30 மணியளவில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் இருவரும் மாலை மாற்றிக்கொண்டு, திருமண உறுதிமொழி மேற்கொண்டு, துணைவர்களாயினர்.

மணமக்களை வாழ்த்தி துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. கே. நீலமேகம், சி. பி. சிற்றரசு, புலவர் நன்னன், கே. ஏ. மதியழகன், முகவை–ஆர். எஸ். பாண்டியன், மு. கருணாநிதி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், அ. பொன்னம்பலனார், ம. பொ. சிவஞானம் உள்ளிட்ட எண்ணற்றோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

மணமக்களுக்கு பலர் வாழ்த்துமடல் வாசித்தளித்தனர். ஏராளமான பரிசுகள், மணமக்களுக்கு வழங்கப்பட்டன.

பின்னர் மணமக்கள் இருவரும் நன்றி கூறிக்கொண்டனர். இரவு 8 மணியளவில், சென்னை 'மாடர்ன் கபே'யில் மணமக்கள் அனைவருக்கும் சிறப்பானதோர் விருந்து நடத்தி மகிழ்வித்தனர்.

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

ஆரம்பித்தது. கோயிலை சுற்றி நின்ற மரங்கள் சுழன்று சுழன்று ஆடின. முத்து பயந்தேவிட்டான். குழந்தையுடன் கோயில் தூணை இறுகப் பிடித்துக்கொண்டான். கோயில் வாசலில் நின்றுகொண்டிருந்த 'வயதான' தென்னை மரம் ஒன்று இங்குமங்கும் 'கிடுகிடு' என்று ஆடிக்கொண்டிருந்தது. காற்று 'ஹோ' என்று வலுத்தது. கோயில் மணி தானே 'டாண், டாண்' என்று அடித்துக்கொண்டது. அதே சமயம் அந்தத் தென்னை மரமும் 'சடசட'வென்று சப்தமிட்டுக் கொண்டு முறிந்தது; சாய்ந்தது!

முத்து 'ஐயோ' என்று அலறிவிட்டான். 'தடால்' என்ற சப்தத்தோடு கீழே விழுந்தது தென்னை மரம். அதே சமயம் கோயில் வாசலில் இருந்த பெரிய **உண்டியல்** மரத்தால் தாக்குண்டது. பூட்டு 'படா'ரென்று தெறித்தது. முத்து உண்டியலிடம் ஓடினான். பார்த்தான். உள்ளே சில்லரைக் காசுகள்!

முத்து அவசர அவசரமாக உண்டியலிலிருந்த சில்லரைகளை எடுக்க ஆரம்பித்தான், மருத்துவருக்காக!

அப்போது சற்றும் எதிர்பாராத வண்ணம், "ஐயோ! திருடன்! திருடன்!!" என்ற சப்தம் பின்னாலிருந்து எழும்பியது. முத்து திரும்பிப் பார்த்தான்.

"அய்யோ! அய்யோ! இதென்ன அக்கிரமம்! அநியாயம்! என் தாய்—உலகுக்கு தாய்—காளியம்மா விடமேயா திருடி விட்டான்? அடப்பாவி! துரோகி!" என்று அலறிக்கொண்டே ஓடி வந்தார் ஒருவர். முத்து அவரைப் பார்த்தான். நேற்றிரவு குடித்து விட்டுப் போனாரே அவர்தான் அந்த மனிதர்! "ஐயா...!" என்று முத்து எதுவோ சொல்ல ஆரம்பித்தான, அழுது கொண்டே. அவர் அவனைப் பேச விடவில்லை. புலியைப்போல பாய்ந்தார், அடித்தார், உதைத்தார், அந்தப் பச்சிளம் உடலைப் படாதபாடு படுத்தினார். முத்து நிலை குலைந்து கீழே விழுந்தான்.

"பூசாரியைப் பார்த்தீர்களா? காளியின்மேல் எத்தனை பக்தி! எத்தனை கவனிப்பு!" என்றது சற்று நேரத்தில் அங்கு கூடிவிட்ட கூட்டம்! ஆமாம்; அவர்தான் அந்தக் கோவில் பூசாரி!

அப்போது கோவிலுக்குள் கிடந்த குழந்தை அழ ஆரம்பித்து விட்டது. அந்த மனிதர் ஓடினார். பார்த்தார். "அடப்பாவி! என் அன்புக் குழந்தையையுமல்லவா திருடிக்கொண்டு கிளம்பியிருக்கிறான்!" என்று கத்தினார்! இரவு காலைப் பிடித்தழுத குழந்தையை உதைத்து விட்டுப் போனவர்தான் இப்போது சுயநினைவோடு பேசினார்.

கூட்டம் மெதுவாக கலைந்தது. முத்து தள்ளாடி எழுந்தான். காளியின் சிலையைப் பார்த்தான். இரத்தம் தோய்ந்த நீண்ட நாக்கு—கொடுமை குதிக்கும் கோழி முட்டைக் கண்கள்—விரிந்து கிடக்கும் பரட்டைக் கூந்தல்—இந்த பயங்கரத்தோடு நின்ற அந்த பேசாத சிலை, "என்னை ஏனப்பா பார்க்கிறாய்? என்னிடம் ஏது இதயம் உனக்காக ஏங்க—இரக்கம் காட்ட? நான் கல்! கல்!" என்று பேசுவதைப்போல இருந்தது!

முத்து நடந்தான். மழை நீரிலே மிதந்து வந்த ஏதோ ஒன்று அவன் கால்களில் பட்டது. குனிந்து எடுத்தான். அது அவனுடைய 'ஆட்டோகிராப்' புத்தகம்! காற்றிலே பறந்து அவனைப் பிரிந்தோடிய அது, மழை நீரிலே மிதந்து வந்து அவனிடமே சேர்ந்து விட்டது. புத்தகத்தை விரித்தான்.

"என்னிடம் கையெழுத்துக் கேட்காதே! உன்னிடம் கேட்கும்படி உயர்ந்து வா!"

அந்தப் பொன் மொழிகளைப் படித்தான். அவனது வீங்கிப் போன முகத்திலே எங்கிருந்தோ புன்னகை அரும்பியது. அவன் ஏன் சிரிக்கிறான்? எப்படி உயர்ந்து வருவது என்றா?—இருக்கலாம்; இருக்கலாம்; இந்த விடைக்கு பதில் கிடைக்கும் வரை அவன் நடந்துகொண்டுதான் இருப்பான்.

அவனுக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள்!

—சொர்ணம்

நாக நாட்டில்...

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

குழந்தைகள் பணிந்துவிடவில்லை. நேரடியாக விடுதலைப் பாசறையிலேயே படைவீரர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டார்கள்!

அவர்களுடைய 'சாத்விகப் போராட்டம்' இதோடு நின்றுவிடவில்லை.

'ஆறாவது பிரிவு'

நாகமலைத் தொடரின் நிர்வாகத்தைக் கவனிக்க 'நாகர் நேஷனல் கௌன்சில்' என்னும் அமைப்பை இந்திய அரசு ஏற்படுத்தியது.

அதற்கு நாகர்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது விதி.

ஆனால் நடந்தது என்ன? நாகர் நேஷனல் கௌன்சிலுக்கு எந்த ஒரு நாக நாட்டானும் அபேட்சை பத்திரம் தாக்கல் செய்யவில்லை.

ஆமாம்; நாகர்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கும் இந்திய அரசியல் அமைப்பின் ஆறாவது பிரிவு, இயங்கவே இல்லை! தாலாட்டித் தூங்க வைத்தது!

விடுதலை கேட்கிறோம்: அடங்கி நடக்கச் சொல்வதற்கா முயற்சிசெய்கிறீர்கள்?—என்று எள்ளி நகையாடுவதைப்போல தேர்தலையே பகிஷ்கரித்து விட்டார்கள்.

நாக நாட்டின் எல்லைக்கோடு!

அவர்கள் கேட்கும் நாட்டிற்கான உத்தேச எல்லைக் கோட்டையும் பிசோ வகுத்திருக்கிறார்.

நாகஜில்லாவைத் தவிர, வடகிழக்கு எல்லைப்புற அமைப்பிடம் இருக்கும் தூன்சாங் பகுதியையும், மணிப்பூர் பகுதியிலுள்ள நாகர் வாழும் இடங்களையும் அவர்கள் கேட்கின்றனர்.

அதன்படி பத்தாயிரம் சதுர மைல்கள் பரப்பளவும், சுமார் ஐந்து லட்சம் மக்கட்தொகையும் கொண்டதாகவும் இருக்கும் பிசோ கேட்கும் சுதந்தர நாக நாடு!

திராவிடம் தனித்து இயங்க முடியாது; அது சிறிய நாடு— என்போர் இந்தப் புள்ளி விபரங்களைப் பார்த்தாவது தெளிவடையட்டும்.

அந்தப் பத்தாயிரம் மைல்களிலே பெரும்பான்மை மலைப் பிரதேசம்! அதை வைத்துக் கொண்டுதான் தனித்து வாழ முடியுமென்று கர்ஜனை செய்கின்றனர் நாகர்கள்!

—இந்த மாபெரும் விடுதலை சக்தியைத்தான் கேலி செய்கிறார் பண்டிதர்!

'ஜனநாயகப் புலி'யின் உறுமல்!

1952-ம் ஆண்டிலே ஷில்

பொதுக் கூட்டத்தில் பேசும் போது நேரு கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

"நாகர்கள் சுதந்திரம் கோருவதும், தனிநாடு கேட்பதும் நான்சென்ஸ்! பேதமை! நடக்க முடியாதது! அது மட்டுமின்றி அது நல்லறிவுக்கு மாறுபட்டதுமாகும்!"

அதே ஆண்டு மார்ச்சுமாதம் ஒரு நாகர் தூதுக் குழு நேருவைச் சந்தித்தது. அப்போது அந்த 'ஜனநாயகப் புலி' என்ன சொல்லி உறுமிற்று தெரியுமா?

"நான் பதவியில் இருந்தாலும் சரி; அல்லது வேறு யார் வந்தாலும் சரி; அன்றி வானமே இடிந்து வீழ்ந்தாலும் சரி; நாகர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு அனுமதிக்கப்படவே மாட்டார்கள்!"

நாகநாடு ஏதோ நேருவின் பாட்டன் வீட்டுப் பரம்பரைச் சொத்தைப் போலவும், அதை அவர்கள் தட்டிப் பறிக்கப் பார்ப்பதைப் போலவும் நினைத்துக் கொண்டு இறுமாப்போடு பேசியிருக்கிறார், நேரு!

இந்தியா சுதந்திரம் பெற வேண்டுமென்று கேட்டபோது சர்ச்சில்கூட ராங்கமாகத்தான் பேசினார்!

எங்கள் பசியைப் போக்க ரொட்டித் துண்டு வேண்டுமென்று பிரான்சு மக்கள் லூயி மன்னனைப் பார்த்துக் கேட்டபோது அவன்கூட இவ்வளவு ஆணவமான பதிலைச் சொல்லவில்லை!

சலாசர்கூட ஒரு வரம்புக்கு உட்பட்ட வாசகங்களைத்தான் சொல்ல முன் வந்தான்!

ஆனால் நேரு சொல்லுகிறார், வானமே இடிந்து விழுந்தாலும் நாகர்களுக்குச் சுதந்தரம் தர முடியாதாம்!

அது நான்சென்சாம்!

பேதமையாம்!

அறிவுக்குப் பொருந்தாததாம்!

அல்ஜீரியா சுதந்தரம் பெற வேண்டும்—அது நான்சென்ஸ் அல்லவாம்!

கோவாவைவிட்டு போர்ச்சுகீசியனே வெளியேறு!—இது பேதமையல்லவாம்!

ஆனால்; நாக நாட்டை விட்டு டெல்லி ஏகாதிபத்தியமே வெளியேறு!—என்பது பேதமையாம்! அறிவுக்குப் பொருந்தாததாம்!

பாவம்; இட்லர் பாதையிலே போகிறார், பண்டிதர்!

எது நான்சென்ஸ் என்பதை உலகம் அவருக்கு நாளை உணர்த்தத்தான் போகிறது!

அதற்குள் பண்டிதர் கூட்டத்தின் நாவும், மனமும் திருந்தினால் சரித்திரத்திலே இறுமாப்பு நிறைந்தவர்களுக்குக் கிடைத்த முடிவு இவர்களுக்கு ஏற்படாமலிருக்கும். அதை உணர்ந்துகொள்கிற அளவுக்கு அவர்கள் புத்திசாலிகளா என்பதைத் தெரிந்துகொள்ள நாடும், நாமும், நாகர்களும் ஆவலோடு காத்திருக்கிறோம்!

சரோஜினி-ராஜா

வாழ்க்கை ஒப்பந்தம்

அண்ணா தலைமையில் சிறப்பான நிகழ்ச்சி!

சென்னை சட்டசபை உறுப்பினர் திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்களது செல்வி டி. எஸ். சரோஜினி—செல்வன் எம். ராஜா வாழ்க்கை ஒப்பந்தம், 15—7—56 காலை 9 மணியளவில், திருவொற்றியூரில், மணமகள் இல்லத்தில் அண்ணா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டதுடன், மோதிரம் அணிவித்தும், உறுதிமொழி மேற்கொண்டும் துணைவர்களாயினர்.

சீர்திருத்த மணம் புரிந்து கொண்ட மணமக்களை வாழ்த்தி டாக்டர் பி. வரதராசுலு, எம். எல். ஏ., வி.வி. இராமசாமி எம்.எல்.சி., ப.ஜீவானந்தம் எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார், கே. கே. நீலமேகம், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

மாலையில், திருமணத்தை ஒட்டி, தோழியர் சாயி—சுப்புலட்சுமி குழுவினரால் சிறப்பானதோர் நடன **விருந்தும் நடைபெற்றது.**

உயர்ந்து வா!

....சென்ற இதழ் தொடர்ச்சி

முத்துவுக்கு தலையே சுற்றுவது போன்ற பிரமை தோன்றி விட்டது. உடலுக்குச் சமானமான 'ஆட்டோகிராப்' புத்தகம்—அதிலே உயிருக்கு ஈடான அந்தத் 'தாரக மந்திரம்'—இழந்து விட சம்மதிக்குமா அவனது ஏக்கம் நிறைந்த நெஞ்சு?

ஆகவேதான் அவனையும் அறியாமல் அலறிவிட்டான்! துன்பங்கள் அடுக்கடுக்காக சூழ்ந்து வரும்போதுதான் மனிதன் இருக்கும் பலத்தையும் பறிகொடுத்து விடுவான்; ஏதும் செய்ய முடியாத நிலை அடைவான் — என்பார்கள். அது என்னவோ நூற்றுக்கு நூறு உண்மை என்று சொல்லியது முத்துவின் அப்போதைய நிலை! தெரு நாய் குரைத்து ஓயும் வரை, முத்து வெறி பிடித்தவனைப் போலவே நின்று கொண்டிருந்தான், சிலை போல.

கூட்டத்திலே அந்தத் தலைவர் பேசினார்:

"நேரம் பொன்னுக்கு ஈடானது; அது போல, அந்த நேரத்தில் செய்யப்படும் செயல்கள் ஒவ்வொன்றும் விலைமதிப்பற்ற 'பொன்'னாக இருக்க வேண்டும். ஆமாம்; எப்போதும் நல்லதே செய்; தப்பாதே நீதியிலிருந்து; அது உன்னை உயர்த்தும்..." என்று.

அதை மறந்து விட்டானா முத்து?

நெஞ்சு குலுங்க, உடல் நடுங்க, காற்றோடு கலந்து வந்ததே அழுகுரல், அது எங்கிருந்து எழும்பியது? இந்த வினாகூட அப்போது முத்துவின் உள்ளத்திலே எழவில்லை. அவன் அதையும் மறந்து விட்டானா, என்ன?

வானத்திலே கரு மேகங்கள் சூழ்ந்தன. அவைகளிடையேதான் எத்தனை ஒற்றுமை! எங்கிருந்தோ திட்டுத் திட்டாக வந்து ஒன்று சேர்ந்து, பயமுறுத்தி நிற்கும் படைக் கோலம்தான் என்ன? அதே சமயம், "என்ன திமிர் உனக்கு? உன் கருமையைக் கண்டு நான் அஞ்சேன்; நினைத்தால் ஒருக்கணத்தில் ஒழித்து விடுவேன்!" என்று சொல்வதைப் போல் 'சில்' லென்று வீசியது மென்காற்று!

முத்துவின் மனோநிலையை அறியுமா இயற்கை? 'கடமுடா' என்ற பெரியதோர் இடியொலி எழுந்து ஓய்ந்தது.

அப்போது...

'சலசல' வென்று சருகுகள் நொறுங்க, யாரோ நடந்து வருவதுபோன்ற சப்தம் எழும்பியது. அதைத் தொடர்ந்து புரியாத விதத்திலே, தாறுமாறான சங்கீதமும் கேட்டது. பாட்டா அது? இல்லை; இல்லை! கர்ணகடூரமான காட்டுக் கூச்சல்!

சப்தம் நெருங்கியது; அதற்குக் காரணமான உருவமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

முத்துவுக்கு அப்போதுதான் சுயநினைவு வந்தது. பார்த்தான். எதிரே தலைவிரி கோலமாக—கண்கள் சிவந்திருக்க — பயங்கரமான தோற்றத்துடன் — காட்டுக் கூச்சல் எழுப்பிக்கொண்டு வந்தார் ஒருவர். அவர் கையிலே... முத்து கூர்ந்து கவனித்தான். ஒரு பெரிய 'பாட்டில்' இருந்தது. முத்துவுக்கு உண்மை புரிந்துவிட்டது. அந்த மனிதரின் அலங்கோல நிலையும், கையிலே இருந்த பாழும் பொருளும் அதை ஆமோதித்தன. ஆமாம்; அவர் தன்னை மிருகமாக்கிக் கொண்டிருக்கிறார், அந்தப் பொருளின் உதவியால்!

அவர் புரியாத பாஷையில் ஏதேதோ உளறிக் கொண்டு வந்தார். முத்து விலகிக் கொண்டான். அவர் அவனைக் கடந்து சென்றார், தள்ளாடித் தடுமாறி கீழே விழுந்து எழுந்து!

அதே சமயம்..

எங்கிருந்தோ ஒரு அழுகுரல் கேட்டது. முதியதைப் போன்றது அல்ல; மெல்லிய குரலில்—நன்றாகத் தெரிந்தது, ஒரு குழந்தையின் குரலென்று. முத்து திடுக்கிட்டான்!

பயங்கரமான இடி சப்தத்துடன் —'பளீர்' என்று தோன்றி மறைந்தது பிரகாசமான மின்னல்! அந்த ஒளியிலே தூரத்தில் இருந்த காளி கோவிலும், அதற்குப் பக்கத்திலே இருந்த ஒரு சிறிய வீடும் நன்றாகத் தெரிந்தன.

மறுபடியும் அந்தக் குழந்தையின் அழுகுரல் கேட்டது. முத்து கூர்ந்து கவனித்தான். அந்தக் குரல் அந்த வீட்டிலிருந்துதான் எழும்புகிறதா? முத்து யோசனையின்றி அந்த வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அழுகை சப்தமும் நெருங்கிக் கொண்டே வந்தது. நிச்சயமாக அந்த சப்தம் அங்கிருந்துதான் வருகிறது என்பதை முத்து உணர்ந்து கொண்டுவிட்டான்.

என்னவோ ஏதோ என்று ஏதும் புரியாத நிலையில் வீட்டிற்குள் நுழைந்ததும், அவன் 'ஐயோ' என்று அலறிவிட்டான். சுவற்றிலே கரியை அப்பிக்கொண்டு, இப்போதோ இன்னும் சிறிது நேரத்திலோ சாகப் போகிறேன்-என்று உணர்த்திக் கொண்டிருந்த விளக்கொளியில் அந்த வீட்டின் அலங்கோல-பரிதாபகரமான நிலையே அவனை அப்படி அலறவைத்து விட்டது!

வீட்டிலே சாமான்கள் மூலைக்கொன்றாக இரைந்து கிடந்தன; துர்நாற்றம் வீசியது. முத்து நன்றாகப் பார்த்தான். வீட்டின் ஒரு மூலையில் கிடந்த படுக்கை ஒன்றில் ஒரு அம்மா படுத்திருப்பது தெரிந்தது. முத்து அருகிலே ஓடினான். படுக்கைக்குப் பக்கத்திலே தரையிலே ஒரு குழந்தை உருண்டு கிடந்தது. காலடி ஓசையைக் கேட்டதாலோ என்னவோ, அது மறுபடியும் அடிவயிற்றிலிருந்து குரலெடுத்துக் கத்த ஆரம்பித்து விட்டது.

வெளியே பலமான இடிக்குரல் கேட்டது பெருமழை பெய்ய, தன்னைத் தயாராக்கிக் கொண்டிருந்தது கருவானம்!

முத்து படுக்கையிடம் நெருங்கி "அம்மா! அம்மா!...கொஞ்சம் எழுந்திருங்க! பிள்ளை அழுவுது!" என்றான். அந்த அம்மா வாயைத் திறக்க வில்லை. எலும்பும், தோலுமாக பலநாள் நோயில் கிடந்ததைப் போன்றிருந்த அந்த உடல் அசைபக்கூட இல்லை! "அம்மா! அம்மா!" என்றபடியே முத்து மீண்டும் எழுப்பினான். உடலைத் தொட்டான், ஜில்லிட்டிருந்தது உடல். முத்து பயந்து விட்டான். அப்புறம்தான் நன்றாகக் கூர்ந்து கவனித்தான். அந்த அம்மாவின் தலையிலிருந்து இரத்தம் வழிந்தோடி உறைந்து கிடந்தது. பக்கத்திலே சிதறிக் கிடந்தது ஒரு கண்ணாடி பாட்டில்! "அம்மா!... அம்மா!..." என்று கத்திக் கொண்டே உடலைத் தொட்டு எழுப்பினான் முத்து.

ஆனால் அவள் எழுந்திருக்கவில்லை; பேச்சு இல்லை; மூச்சு இல்லை! ஆமாம்; தெருவிளக்கடியிலே முத்து படுத்திருந்தபோது எழும்பிற்றே பயங்கர ஓலம், அதுதான் அந்த அம்மா எழுப்பிய கடைசிக் குரல்!

முத்து நடுங்கிக் கொண்டே கீழே கிடந்த குழந்தையைத் தூக்கினான். என்ன அக்கிரமம்! அதன் தலையும் உடைந்திருந்தது. தலையைச் சுற்றிப் பரவிக் கிடந்த இரத்தம்—அதன் அழுகுரல்—முத்துவை என்னவோ செய்தது!

"மாற்றார் அழும்போது நீ சிரிக்காதே! அந்த அழுகையை மாற்றுவதற்கு வழி தேடு!... அந்த மகத்தான சேவை உன் உயர்வுக்கு தேவை! வெற்றிக்குப் பாதை ...!"

கூட்டத்தில் தலைவர் பேசியது முத்துவின் காதுகளில் மீண்டும் ஒலித்தது. அதே சமயம் 'இலவச மருத்துவ நிலையம்' என்ற பெயர்ப் பலகை ஒன்றை காளி கோவிலுக்கு கொஞ்ச தூரத்தில் அவன் அடிக்கடி பார்ப்பதும் நினைவுக்கு வந்தது. உடனே குழந்தையைத் தூக்கிக் கொண்டான். அந்தக் கும்மிருட்டில் மருத்துவ மனையை நோக்கி ஓடினான்.

அப்போது மழை 'சோ' வென்று பெய்து கொண்டிருந்தது. காற்று வீசிக் கொண்டிருந்தது.

அதை எல்லாம் பொருட்படுத்தாது ஓடிக் கொண்டிருந்த முத்துவின் மனதில் ஒரே குழப்பம்-குழப்பத்தினிடையே அவன் அந்த வீட்டில் என்ன நடந்திருக்கும் என்ற முடிவுக்கும் வந்தான். குடித்துவிட்டு சாலைவழியே போனாரே, அவருடைய வீடுதான் அது. அவருடைய மனைவி நோய்ப் படுக்கையில் கிடப்பவள்; கணவன் குடிப்பதை வெறுப்பவள்; ஆனால், அவரோ குடித்துவிட்டால் உலகையே மறப்பவர்! வீட்டில் தினசரிப் போராட்டம்! அப்படிப்பட்ட போராட்டம் ஒன்றுதான் அன்று அந்த அம்மாவின் உயிரையே விழுங்கிவிட்டது. நோயால் தாக்கப்பட்டு — கவனிக்கப்படாது கிடந்த மனைவியை நோக்கி, 'குடிக்காதே' என்று தடுத்த காரணத்தால்—பாட்டிலை வீசிவிட்டார் அவர்! "அப்பா!" என்று காலைக் கட்டிப்பிடித்த குழந்தையையும் உதைத்துத் தள்ளியிருக்கிறார், உருண்டு, புரண்டு, மண்டை உடையும் அளவுக்கு!

காற்று பயங்கரமாக வீச ஆரம்பித்தது. முத்துவைக் காற்று தள்ளியது; திக்குமுக்காட வைத்தது; முத்து அதைப் பொருட்படுத்தாது ஓடினான்.

அவன் நினைத்தான் மருத்துவ மனையிலே, முழு மனதுடன் வரவேற்க காத்திருப்பார்கள் என்று! ஆனால் பணத்துக்காக பண்பை விலை பேசுவோர் 'இலவசம்' என்ற பலகையை வெளி வேஷத்துக்காகவே மாட்டிக் கொண்டிருப்பதை அவன் உணரவில்லை. குழந்தையின் தலையில் ஒரு 'கட்டு' போட்டுவிட்டு, "இரத்தம் விரயமாகிவிட்டது. உயிருக்கு ஆபத்துதான்! பத்து ரூபாய் கொடு; உயர்ந்தரக 'இன்ஜெக்ஷன்' ஒன்று போடுகிறேன்!" என்று பேசி அனுப்பிவிட்டார், அங்கு இருக்கும் மருத்துவர்.

"பத்து ரூபாய்! அப்பப்பா! நூற்றுஅறுபது அணாக்கள்! நான் எங்கே போவது?" என்ற ஏக்கத்துடன் மருத்துவ மனையிலிருந்து இறங்கினான் முத்து.



பயங்கரமான உறுமலுடன் காற்று வீசிக்கொண்டிருந்தது. பெரிய பெரிய மலைகளே அசைந்தாடுவதைப் போல-சாலையோரத்து மரங்கள் ஆடின. முத்துவால் நடக்கவே முடியவில்லை ஓரிடத்தில் ஒதுங்கி நின்றான்.

காற்று பெருங் காற்றாக மாறியது; பெருங்காற்று புயலைப்போல் உருவெடுத்தது. நேரம் சென்று கொண்டேயிருந்தது. காற்றின் வேகம்—அதன் பயங்கரம் — பெருகிக் கொண்டேயிருந்தது.

பொழுதுவிடியும் நேரமும் நெருங்கியது. காற்றின் வேகத்தில் முத்து ஒதுங்கி நின்ற மரம் 'கீழே விழுவேன்!' என்று பயமுறுத்தியது.

முத்து, உடனே குழந்தையுடன் பக்கத்திலிருந்த காளியின் கோயிலுக்கு ஓடினான். ஆபத்தற்ற இடம் அதுவென்று கருதினான் அவன்!

கோவிலில் பதுங்கிக் கொண்டான். காற்று பயங்கரமாக வீச.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்



எஸ். கே. மணி; கீழ்நாச்சிக்குளம்.

(?) நேரு டிட்டோவுடன் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாராமே ?

ஆமாம்; ஆனால் அதேபோல அவரது ஆட்சியில் துப்பாக்கிகளும், கண்ணீர் வெடிகளும் ஓய்வெடுத்துக் கொள்ளவில்லையே !

(?) ஆச்சாரியாருக்கு இறக்கை இருந்தால் ?

இறக்கைகள் இருந்துதானே ஈசற் பூச்சியாகிவிட்டார் அவர் !

" சுவை "; பொன்பரப்பி.

(?) காமராசரின் 'மாமனார்' வீடு எது ?

டில்லியைத்தான் அவர் மாமனார் வீடு என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். பாவம்; அங்கே இருப்பவர்களோ இவரைச் சக்களத்தியாக நினைத்து நடத்துகிறார்கள் !

துரை. முருகேசன்; காரமடை.

(?) அறிவுப் பசியை அடக்குவது எப்படி ?

அந்தப் பசிக்கு பஞ்சமேற்பட வேண்டாம்; பெருகிவளரட்டும். அப்போதுதான் நாடு வளரும் !

(?) காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருந்துகொண்டு ஆச்சாரியாரும் காமராசரும் கொள்கையளவில் சண்டையிட்டுக் கொள்வதேன்?

புராணத்தில் ஒரேவிஷ்ணுவின் அவதாரமான பரசுராமனும்,ராமனும் சண்டையிட்டுக் கொள்ளவில்லையா — அதே புராணத்தைத் தான் திருப்பிப் படிக்கிறார்கள், இவர்கள் !

என். எஸ். பாரி; விஜயபுரம்.

(?) பண்டார நாயகாவுக்கும், காமராசருக்குமுள்ள வித்யாசம் என்ன ?

பண்டாரநாயகா உதைக்கிறார் ; காமராசர் அந்தக் காலுக்கு முத்தமிடுகிறார் !

எம். ஜெயராமுலு; சீர்காழி.

(?) பதவி வேப்பங்காயாவது எப்போது ?

மரத்துப்போன மனச்சாட்சிக்கு உணர்ச்சி வரும்போது !

(?) சாவு எப்படி இருக்கும் ?

'குளோரபாம்' கொடுக்கப்பட்ட நேரம் கால எல்லையின்றி நீடிக்கப்பட்டதைப்போல இருக்கும்!

ஜமால்; சாலைநகர்.

(?) விபச்சாரம் நடைபெறாத நாடு உண்டா ?

உண்டு; ரஷ்யாவில் காசுக்காக விபச்சாரம் நடைபெறுவதில்லை.

எஸ். பி. ஜயராமன்; வேலூர்

(?) கிளிப்பிள்ளைக்கும், நேரு சொன்னதையே திருப்பிச் சொல்லும் காமராசருக்கும் என்ன வித்யாசம் ?

கிளிப்பிள்ளை அழகாயிருக்கிறது.

அ. மலர் மன்னன்; திருச்சி.

(?) ஆச்சாரியாருக்கு அனுமார் போல வாலிருந்தால்......?

அதன்மீது உட்கார்ந்து, அப்படியாவது தான் காமராசரைவிட உயர்ந்த ஆசனத்தில் இருப்பதாகப் பெருமையடித்துக் கொள்வார்!

கோமதி சுப்ரமணியம்; நாகை.

(?) மத்ய அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது ?

நேரு வெளி நாட்டிற்குச் சென்றிருப்பதால் தூங்கிக்கொண்டிருக்கிறது.

★ 7ம் பக்கத் தொடர்ச்சி.

நீர் கலங்கிற்று. நயினா, மகிழ்ச்சியை வெளியிட இயலாது, அழுதவாறு அவள் கைகளைத் தன் முகத்தில் ஒத்திக் கொண்டான். இதை அவன், அவனையறியாமலே செய்தான். கையை விடுவித்துக் கொண்ட ஆனந்தி, விஷச் சிமிழை மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொண்டாள். மருந்தை அப்படியே கீழே கொட்டிவிடுமாறு நயினாவிடம் கூறினாள். நயினா, மருந்தைக் கீழே கொட்டினான். ஆனந்தியின் உயிரைக் குடிக்க இருந்த விஷம் தரையில் ஓடிற்று.

நயினா, ஆனந்தியிடம் திரும்பி, "ஆனந்தி! இப்போது நம்பிக்கை வந்துவிட்டதா; விஷம் கலந்தது நானல்லவென்று!"

"நீங்கள் விஷம் கலக்கவில்லை! அமுதமல்லவா கலந்துவிட்டீர்கள்!" என்றாள் அவள், புன்னகையோடு! அப்போது திடீரென்று "டோமீல்! டோமீல்!!" என்று துப்பாக்கி வேட்டுச் சப்தம் கிளம்பிற்று. மாத்துவ மனை முழுதும் 'குய்யோ! முறையோ!' என்று பேரொலி எழுந்தது!

(தொடரும்)

எஸ். வி. லிங்கம் உடல்நிலை

தோழர்எஸ்.வி.லிங்கம் அவர்கள் உடல்நிலை பாதிக்கப் பட்டதால் திருச்சி அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். இன்னும் இரண்டு வாரங்கள் இங்கேயே இருக்க வேண்டுமென டாக்டர்கள் கூறியுள்ளனர்.

தென்னகத்து வீதிதோறும் வெற்றி முழக்கமிடும்
'முரசொலி' வழங்கும்
முத்தமிழ் இலக்கிய சித்திரச் செல்வம்—

முத்தாரம்

கதைக்குவியலாய் —
கட்டுரைச் சுரங்கமாய் —
கவிதைத்தேன் குடமாய் —
சித்திரக் கூடமாய் —
செந்தமிழ்த் தோட்டமாய்த் தயாராகும்—

முத்தாரம்

விஞ்ஞான விவேகம் — வித்தகர் பேருரை —
வெளிநாட்டுக் காவியம்—எட்டுத்திக்கும்
சென்று கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு
குவிக்கும், கோலமிகு ஏடு—

முத்தாரம்

பிறந்த நாட்டுக் கலை வளர்க்கும் —
பெண் குலத்துப் பெருமை சொல்லும்—
பீடுபெற்ற இளைஞருக்குப் பெரு விருந்தளிக்கும்
திங்கள் இதழ்! தித்திக்கும் தமிழ் மலர்!

முத்தாரம்

விற்பனையாளர்கள் முன் பணத்துடன் உடனடியாக எழுதவும்:
'முத்தாரம்' தபால் பெட்டி 712, சென்னை-6.

விற்பனைக்குத் தயார்

அழகான அச்சு எழுத்துக்கள்—டெம்மி மெஷின்—மற்ற அச்சகச் சாமான்கள்—இவற்றுடன் கூடிய அச்சகம் ஒன்று விற்பனைக்குத் தயார்.

உடன் விண்ணப்பிக்கவும்
'ஏயார்பி'
பிரபாத் பில்டிங்ஸ்,
97, பிராட்வே, சென்னை—1.

"என். வி. நடராசன்"
நூல் நிலையத் துவக்க விழா

22—7—56 ஞாயிறு மாலை 6 மணிக்கு
மீர்சாகிப்பேட்டை பிள்ளையார் கோவில் திடலில் நடைபெறும்
நூல் நிலையத் திறப்பு :
சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு.
சிறப்புச் சொற்பொழிவு :
மு. கருணாநிதி
'தலைப்பு : நூல் நயம்'

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு, சென்னை-6.